# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை

**இலங்கை நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் தாபிப்புக்கென ஏற்பாடு செய்வதற்கும்; பணக் கடன் வழங்கு தொழிலையும் நுண்நிதித்தொழிலையும் ஒழுங்குபடுத்துவதற்கும்; பணக் கடன் வழங்கு தொழிலினதும் நுண்நிதித்தொழிலினதும் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கும்; 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டத்தை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

---

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் 2024, சனவரி 9 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, ஒற்றேபர் மாதம் 30 ஆந் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[234 ஆம் சட்ட மூலம்]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விலை: ரூபா 135.00** **தபாற்செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்

*ச.வ.-ஒ 42/2019*

***இலங்கை நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் தாபிப்புக்கென ஏற்பாடு செய்வதற்கும்; பணக் கடன் வழங்கு தொழிலையும் நுண்நிதித்தொழிலையும் ஒழுங்குபடுத்துவதற்கும்; பணக் கடன் வழங்கு தொழிலினதும் நுண் நிதித்தொழிலினதும் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கும்; 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டத்தை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்.***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

1. (1) இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் .... ஆம் இலக்க, நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் இப்பிரிவு தவிர்ந்த ஏற்பாடுகள், (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக்குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், எத்தேதியன்று இச்சட்டமூலம் பாராளுமன்றத்தின் சட்டமொன்றாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பாகம் I

### நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையைத் தாபித்தல்

*நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்கு படுத்தும் அதிகார சபையைத் தாபித்தல்*

2. (1) (இச்சட்டத்தில் "அதிகாரசபை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை என அழைக்கப்படவேண்டிய அதிகாரசபை யொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

1 - PL 014137 - (2024/01)

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரின்மூலம் இடையறாவழியுரிமையுடனும் பொது இலச்சினையொன்றுடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

அதிகாரசபையின் குறிக்கோள்கள்

3. அதிகாரசபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாக விருத்தல் வேண்டும் -

(அ) உரிமமளிக்கப்பட்ட பணக் கடன்வழங்குநர்களை ஒழுங்குபடுத்துதலும் அவர்களை மேற்பார்வை செய்தலும்;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதலும் அவற்றை மேற்பார்வைசெய்தலும்;

(இ) மத்தியவங்கியுடனும் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை யிலான வங்கித்தொழில் சங்கங்கள் மற்றும் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புகளை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்யும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளுடனும் ஒருங்கிணைதலும்; அத்துடன்

(ஈ) உரிமமளிக்கப்பட்ட பணக் கடன் வழங்குநர்களினதும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனங்களினதும் வாடிக்கையாளர்களைப் பாதுகாத்தலும்.

அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

4. அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டும் -

(அ) பணக் கடன் வழங்கு தொழில் மற்றும் நுண்நிதித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு உரிமமளித்தலும் அவர்களை ஒழுங்குபடுத்துதலும்;

(ஆ) பணக் கடன்வழங்கு தொழில் மற்றும் நுண்நிதித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களை மேற்பார்வை செய்தலும்;

(இ) சந்தை நடத்தை மீதான கொள்கைகளைத் தீர்மானித்தலும் சந்தை அபிவிருத்திகளுக்கு இசைய உரிமம்பெற்றவர்களை மேற்பார்வைசெய்து ஒழுங்கு படுத்துதலும்;

(ஈ) உரிமம்பெற்ற பணக்கடன் வழங்குநர்கள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனங்கள் என்பவற்றுக்கு மத்தியில் பொறுப்பான கடன் வழங்கும் கலாசார மொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி தவிர்ந்த, இலங்கை கடன் தகவல் பணியகம் உட்பட ஒழுங்குபடுத்தும் அதிகார சபைகளுடன் ஒருங்கிணைதலும்;

(உ) அரசாங்க திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூரதிகாரசபைகள், பகிரங்க கூட்டுத்தாபனங்கள், மாகாண அதிகாரசபைகள் மற்றும் வேறு தனியார் அல்லது பகிரங்க குழுக்கள், அரச மற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புக்கள் அல்லது வேறு எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆளுடன் இணைதலும் அவற்றின் ஒத்துழைப்பைப் பெறுதலும்;

(ஊ) பொதுமக்களுக்கு பணக் கடன் வழங்குதல் மற்றும் நுண்நிதி பற்றி கடன் ஆலோசனையளித்தல் மற்றும் நிதிசார் அறிவு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும்;

(எ) உரிமம்பெற்ற பணக்கடன் வழங்குநர்கள் மற்றும் உரிமம் பெற்ற நுண்நிதி நிறுவனங்களின் வாடிக்கை யாளர்களின் முறைப்பாடுகளைக் கையாளுவதற்கு முறைப்பாட்டை கையளிக்கும் பொறிமுறையொன்றைத் தாபித்தலும் அத்தகைய முறைப்பாடுகளின் தரவுத்தள மொன்றைப் பேணுதலும்;

(ஏ) உரிமமளிக்கப்பட்ட பணக் கடன் வழங்குநர்கள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனங்கள் பற்றிய தரவுத்தளமொன்றைப் பேணுதலும்;

(ஐ) பணக் கடன் வழங்குதல் மற்றும் நுண்நிதிச் செயற்பாடுகள் பற்றிய ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சியை நடாத்துதலும்;

(ஒ) அதிகாரசபைக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருத்தலும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும், விற்பனைசெய்தலும், ஈடுவைத்தலும், அளித்தலும், குறித்தளித்தலும், கொடுத்துமாற்றலும் அல்லது வேறு வகையாக கையுதிர்த்தலும்;

(ஓ) காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகளைப் பெறுதலும்:

ஆயின், அதிகாரசபையானது, எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், நன்கொடைகள் மற்றும் விருப்பாவணக் கொடைகள் தொடர்பிலும் எந்த அமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப் பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் பணிப்பாளர் தலைமையதி பதியின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ஔ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாக அல்லது அதிகாரசபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவரினூடாக செய்துகொள்ளலும் நிறைவேற்றுதலும்;

(க) அது தோதானதெனக் கருதுகின்றவாறான ஏதேனும் வங்கியில் ஏதேனும் கணக்கை திறத்தலும் அதனைப் பேணுதலும் அத்துடன் அத்தகைய கணக்கு நிலவுகின்ற ஏற்புடையற்பாலனவான எழுத்திலான சட்டங்களுக் கிணங்க தொழிற்படுத்தப்படுதலும் வேண்டும்;

(ங) அதிகாரசபையின் நிதியத்தை முகாமைசெய்தலும், கட்டுப்படுத்துதலும், நிருவகித்தலும் மற்றும் தொழிற்படுத்துதலும்;

(ச) அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகத்திற்கான விதிகளை ஆக்குதலும்;

(ஞ) பதினைந்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அதன் பணிகளுள் எவற்றையும் வெளிச்சேவையாகப் பெற்றுக்கொள்ளுதலும்;

(ட) ஊழியர்களின் நியமனம், பதவியுயர்வு, ஊதியம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கை முறையொன்றை வகுத்தமைத்தலும் அத்தகைய ஊழியர்களின் லீவு மற்றும் வேறு வேதனாதிகளை வழங்குதலும்;

(ண) அதிகாரசபையின் நிதியத்திலிருந்து பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கான விதிகளை ஆக்குதலும்;

(த) அதிகாரசபையினால் அளிக்கப்படும் ஏதேனும் சேவைக்கான கட்டணங்கள் அல்லது விதிப்பனவுகளை அறவிடுதலும்; அத்துடன்

(ந) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்கு குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு இடைநேர்விளைவாகக் கூடியவாறான அல்லது உகந்தனவாகவிருக்கக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தலும்.

## பாகம் II

## அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும்

பணிப்பாளர்கள் சபையின் அமைப்பு

5. (1) அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகம், முகாமை மற்றும் கட்டுப்பாடு (இச்சட்டத்தில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர்கள் சபையொன்றுக்கு உரித்தாக்கப் படுதல் வேண்டும்.

(2) சபையானது, அதிகாரசபையின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட, குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன் மீது

விதிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது —

(i) திறைசேரிக்கான செயலாளர் அல்லது திறைசேரிக்கான செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் திறைசேரிக்கான பிரதி செயலாளர் ஒருவராகவிருக்கவேண்டிய அவரது பிரதிநிதி;

(ii) மத்திய வங்கியினால் பெயர்குறித்து நியமிக்கப் படும் நிதிசார் முறைமையின் நிலையுறுதிக்குப் பொறுப்பாகவுள்ள மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் அல்லது அவர் சமுகமளிக்காதபோது மத்திய வங்கியினால் அப்போதைக்கு பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதி ஆளுநர் ஒருவர்; அத்துடன்

(iii) வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளர் அல்லது வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் பிரதிப் பதிவாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள அவரது பிரதிநிதி;

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரினால் நியமிக்கப்படும் பின்வரும் நான்கு உறுப்பினர்கள் -

(i) இரண்டு உறுப்பினர்கள்; அவர்கள் கல்விசார் அல்லது உயர்தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் வங்கித்தொழில், நிதி, நுண்நிதி, கணக்கியல், சட்டம், நிருவாகம் ஆகிய துறைகளில் அல்லது வேறு ஏதேனும் இயைபான பாடநெறியில் அனுபவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ii) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இரண்டு வேறு உறுப்பினர்கள்; அவர்கள் கல்விசார் அல்லது உயர்தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் வங்கித்தொழில், நிதி, நுண்நிதி, கணக்கியல், சட்டம், நிருவாகம் ஆகிய துறைகளில் அல்லது வேறு ஏதேனும் இயைபான பாடநெறியில் அனுபவத்தை கொண்டிருத்தலும் வேண்டும்:

ஆயின், நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்களில் ஆகக்குறைந்தது ஒரு உறுப்பினர் பெண் உறுப்பினர் ஒருவராகவிருத்தல் வேண்டும்.

*அதிகார சபையின் தவிசாளர்*

6. (1) திறைசேரிக்கான செயலாளர் அல்லது திறைசேரிக்கான செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் திறைசேரிக்கான பிரதி செயலாளர் ஒருவர் அதிகாரசபையின் தவிசாளராக விருத்தல் வேண்டும்.

(2) தவிசாளர், சுகயீனம், வேறு உடற்றகுதியீனம், இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக தனது பதவியின் கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்கின்றவிடத்து, அமைச்சர், தவிசாளராக செயலாற்றுவதற்கு வேறு எவரேனும் பதவிவழி உறுப்பினரை, உறுப்பினரொருவராக அவரது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக நியமிக்கலாம்.

*அதிகார சபையின் உறுப்பினரொருவராக விருப்பதற்கான தகைமையீனங்கள்*

7. ஆளொருவர் பின்வருமாறிருப்பின் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்கு அத்தகைய ஆள் தகைமையற்றவராதல் வேண்டும் -

(அ) பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராகவிருந்தால் அல்லது வந்தால் அல்லது நியமனத் தேதிக்கு நேர்முற்போந்த இரண்டு ஆண்டுகளின்போது பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்திருந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவராக காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப் பட்டால்;

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப் படுத்தப்பட்டு பொறுப்புவிடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவரொருவராக அல்லது வங்கிமுறிந்த ஒருவராகவுள்ள ஆளொருவராகவிருந்தால்;

(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற் றண்டனைத் தீர்ப்பொன்றை அல்லது நிறுத்தி வைக்கப்படும் தண்டனைத்தீர்ப்பொன்றை அனுப வித்துக்கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்;

(ஊ) அதிகாரசபையினால் அல்லது அதன்சார்பாகச் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வைத்திருந்தால் அல்லது துய்த்தால்; அல்லது

(எ) அதிகாரசபையின் உறுப்பினரொருவராக அவரது பணிகளை அவர் நிறைவேற்றுவதனை பங்கமான முறையில் பாதிக்கும் சாத்தியம் உள்ளவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்.

சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் களின் பதவிக்காலம்

8. சபையின் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும், அவர் பதவிவிலகுவதன்மூலம், அவரது இறப்பின்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்ட உறுப்பினரொருவர்

தவிர்ந்த அத்தகைய உறுப்பினர், தொடர்ச்சியாக அல்லது வேறுவகையாக மூன்று மேலதிக காலங்களுக்கு மேற்படாமல் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை பதவியிலிருந்து அகற்றுதல், அவர்கள் பதவியிலிருந்து விலகுதல் முதலியன

9. (1) சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் அப்பயன்பட்ட கடிதமொன்றின் மூலம் தனது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை எத்தேதியன்று அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப் படுகின்றதோ அத்தேதியிலிருந்து அது பயனுறுதலும் வேண்டும்.

(2) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், சுகயீனம், உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தனது பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்கின்றவிடத்து, அமைச்சர், 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம்:

ஆயின், அத்தகைய நியமனம் எதுவும் மூன்று மாதங்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றிற்கு செய்யப்படுதல் ஆகாது. சொல்லப்பட்ட மூன்றுமாத காலப்பகுதி முடிவுறுவதன்மேல், சுகயீனம், உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை மேலும் தொடர்ந்தால், அத்தகைய உறுப்பினர் அத்தகைய காலப்பகுதி முடிவுறும் தேதியிலிருந்து பதவிவகிக்காதொழிதல் வேண்டும்.

(3) அமைச்சர், நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரை குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் சபையின் உறுப்பினரொருவராக மீள நியமிக்கப்படுவதற்கு அல்லது வேறு ஏதேனும் தன்மையில் சபைக்கு சேவையாற்றுவதற்கு தகவுடையவராதலாகாது.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறக்கின்றவிடத்து, பதவியிலிருந்து விலகுகின்றவிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்றவிடத்து, அமைச்சர், 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரது இடத்தில் வேறொரு ஆளை

நியமிக்கலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவிவகித்தலும் வேண்டும்.

சபையின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்

10. (1) சபையின் கூட்டங்கள் மூன்று மாதங்களில் ஆகக்குறைந்தது ஒரு தடவை நடாத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் தவிசாளர், எவ்வாறாயினும் ஏதேனும் முக்கியத்துவம் வாய்ந்த கருமத்தை கலந்தாலோசிப்பதற்கான தேவையொன்று எழுந்தால் விசேட கூட்டமொன்றுக்கு அழைக்கலாம்.

(2) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

(3) தவிசாளர் மற்றும் மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் சமுகமளித்தல் வேண்டும் என்பதுடன் தவிசாளர் அத்தகைய ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதல் வேண்டும்.

(4) சபையின் கூட்டமொன்று ஒன்றில் -

(அ) கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடம், தேதி மற்றும் நேரமொன்றில் கூடியிருக்கும் கூட்டநடப்பெண் ஒன்றை அமைத்துருவாக்குகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினால் நடாத்தப்படலாம்; அல்லது

(ஆ) பங்குபற்றுகின்றவர்களும் கூட்டநடப்பெண் ஒன்றை அமைத்துருவாக்குகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்ட வேளையின்போது பங்குபற்றும் உறுப்பினர்களை எந்த கட்புல செவிப்புல தொடர்பாடல் வழிவகைகள் மூலம் பார்க்கவும் கேட்கவும் முடியுமோ அந்த கட்புல செவிப்புல தொடர்பாடல் வழிவகைகள் மூலம் நடாத்தப்படலாம்.

(5) சபையானது, இயைபான விடயப்பொருள் ஒன்றின் மீதான எவரேனும் நிபுணரை அல்லது அலுவலர் ஒருவரை, சபையின் பணிகளை பயனுற நிறைவேற்றுவதற்காக அவர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக சபையின்

கூட்டங்களுக்கு வருகைதருமாறு அழைக்கலாம், ஆனால் அத்தகைய ஆள் அல்லது அலுவலர் அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தலாகாது.

(6) சபையின் ஏதேனும் கூட்டத்திலான முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்துக்கு சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மையினரின் வாக்குகளினால் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர், அவரது வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, சபையானது சபையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டத்தில் அலுவல்களை கொண்டுநடாத்துதல் தொடர்பான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

*சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் வெற்றிடம் காரணமாக செல்லுபடி யற்றதாகக் கருதப்படுத லாகாது*

11. பத்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது, அதன் உறுப்பினர்களுக்கு மத்தியில் ஏதேனும் வெற்றிடம் எவ்வாறிருப்பினும் செயலாற்றலாம் என்பதுடன் சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அதன் உறுப்பினர்களுக்கு மத்தியில் ஏதேனும் வெற்றிடம் உள்ளமை அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் உள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

*சபையின் உறுப்பினர்களின், நிபுணர்களின் அல்லது அலுவலர்களின் ஊதியம்*

12. சபையின் உறுப்பினர்களுக்கு, எவரேனும் நிபுணருக்கு அல்லது அலுவலருக்கு, காலத்துக்குக் காலம் வழங்கப்படும் இயைபான அரசாங்க சுற்றறிக்கைக்கிணங்க அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் எந்தநாளன்று அவர் கூட்டமொன்றுக்கு வருகைதருகின்றாரோ அந்த ஒவ்வொரு நாளுக்கும் அத்தகைய படி செலுத்தப்படுதல் வேண்டும்.

*அதிகார சபையின் இலச்சினை*

13. (1) அதிகாரசபையின் இலச்சினை, சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினை சபையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினை, சபையின் உறுப்பினர்களின் வலுவளிப்புடனும் சபையின் எவரேனும் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலும் அல்லது சபையின் எவரேனும் உறுப்பினரினதும் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் முன்னிலையிலும் தவிர ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) சபையானது, எந்த சாதனங்களுக்கும் ஆவணங்களுக்கும் அதிகாரசபையின் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதோ அந்த சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றை பேணுதல் வேண்டும்.

**அதிகார சபையின் கிளைகள்**

14. அதிகாரசபையானது, சபையின் உறுப்பினர்கள் இலங்கையினுள் ஏதேனும் இடத்தில் அதன் கிளைகளைத் தாபிப்பது அவசியமென கருதுகின்றவிடத்து, அவ்வாறு செய்யலாம்.

**அதிகார சபையின் ஏதேனும் தத்துவம் அல்லது பணியை கையளித்தல்**

15. (1) அதிகாரசபையானது, அது அவசியமானதும் உசிதமானதும் என அது கருதுகின்றபோதெல்லாம், உரிமமளித்தல், இச்சட்டத்தின்கீழ் அறவிடப்படும் எவையேனும் கட்டணங்கள் அல்லது விதிப்பனவைச் சேகரித்தல் மற்றும் உரிமம் பெற்ற பணக்கடன் வழங்குநர்கள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்தலுக்கு இயைபான அதன் தத்துவங்கள் அல்லது பணிகள் எவற்றையும் விடயத்துக்கேற்ப, மாவட்ட செயலாளர் ஒருவருக்கு அல்லது ஏதேனும் பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஒருவருக்கு கையளிக்கலாம்; ஆயின் எவ்வாறாயினும், அவ்வதிகாரசபை, அத்தகைய மாவட்ட செயலாளருக்கு அல்லது ஏதேனும் பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கையில் மற்றும் புரிகையில் அவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயலுக்கு அல்லது காரியத்துக்குப் பொறுப்பாகவிருத்தலும் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியினதும் ஏற்பாடுகளை பயனுற நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக எவரேனும் மாவட்டச் செயலாளருக்கு அல்லது ஏதேனும் பிரதேச செயலாளர் பிரிவின்

எவரேனும் பிரதேச செயலாளருக்கு அதிகாரசபை அவசியமென கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் பணிப்பு வழங்கப்படுகின்ற அத்தகைய ஒவ்வொரு அலுவலரும் அவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

*வேறு நிறுவனங்களுடனான உடன் படிக்கைகள்*

16\. அதிகாரசபையானது, எந்தக் கருமம் இச்சட்டத்தின் நோக்கெல்லையினுள் வருகின்றதோ அந்த ஏதேனும் கருமம் பற்றிய தகவல்களைப் பரிமாறுதல் தொடர்பாக ஏதேனும் அரசாங்க நிறுவனத்துடன் அல்லது ஒழுங்கமைப்புடன் அல்லது அதன் முகவராண்மை எதனுடனும் அல்லது ஏதேனும் உள்ளூர் அல்லது வெளிநாட்டு ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வைசெய்யும் அதிகாரசபையுடன் ஏதேனும் உடன்படிக்கையை அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளலாம்.

## பாகம் III

## அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியும் பணியாட்டொகுதியினரும்

*அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி*

17\. (1) அதிகாரசபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை நியமித்தல் வேண்டும்; அவர் அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் செயலாளராகவும் இருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, கொள்கை மற்றும் மூலோபாயம் பற்றிய கருமங்கள் மீதான அதிகாரசபையின் பொதுப் பணிப்புகளுக்கமைய, அதிகாரசபையின் அலுவல்களை நெறிப்படுத்துதல், அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல் அத்துடன் அதிகாரசபையின் ஊழியர்களின் நிருவாகக் கட்டுப்பாடு என்பன பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரசபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன், காலத்துக்குக் காலம் அவர் அவசியமென கருதக்கூடியவாறான அவரது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் அத்தகையவற்றை அதிகாரசபையின் எவரேனும் வேறு ஊழியருக்கு எழுத்தில்

கையளிக்கலாம் என்பதுடன் அத்தகைய ஊழியருக்கு கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவத்தை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதில், நிறைவேற்றுதல் மற்றும் புரிவதில் அவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியத்துக்கு பணிப்பாளர் தலைமையதிபதி பொறுப்பாகவிருத்தலும் தொடர்ந்திருத்தலும் வேண்டும், அத்துடன் எந்த ஊழியருக்கு அத்தகைய எவையேனும் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் அவ்வாறு கையளிக் கப்படுகின்றனவோ அந்த எவரேனும் ஊழியர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேட பணிப்புக்கு அமைய அவற்றைப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் மற்றும் புரிதல் வேண்டும்.

*(4)* ஆளொருவர் பின்வருமாறிருப்பின் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்கு அவர் தகைமையற்றவராதல் வேண்டும் -

(அ) பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராகவிருந்தால் அல்லது வந்தால் அல்லது நியமனத் தேதிக்கு நேர்முற்போந்த இரண்டு ஆண்டுகளின்போது பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராகவிருந் திருந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவராக காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப் பட்டால்;

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப் படுத்தப்பட்டு பொறுப்புவிடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவரொருவராக அல்லது வங்கிமுறிந்த ஒருவராகவுள்ள ஆளொருவராக விருந்தால்;

(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அல்லது நிறுத்தி வைக்கப்படும் தண்டனைத்தீர்ப்பொன்றை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித் திருந்தால்;

(ஊ) அதிகாரசபையினால் அல்லது அதன்சார்பாகச் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வைத்திருந்தால் அல்லது துய்த்தால்; அல்லது

(எ) அதிகாரசபையின் உறுப்பினரொருவராக அவரது பணிகளை அவர் நிறைவேற்றுவதனை பங்கமான முறையில் பாதிக்கும் சாத்தியமுள்ளவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்.

(5) அதிகாரசபை, பணிப்பாளர் தலைமையதிபதி பின்வருமாறிருப்பின் அத்தகைய ஆளை அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பதவியிலிருந்து நீக்கலாம் -

(அ) அவரது கடமைகளைப் புரிவதற்கு நிரந்தரமாக இயலாதவராக வந்தால்;

(ஆ) அதிகாரசபையின் அபிப்பிராயத்தில் மோசடியான அல்லது சட்டவிரோதமான தன்மையொன்றாகவுள்ள அல்லது அதிகாரசபையின் அக்கறைகளுக்கு பங்கமாகவுள்ள ஏதேனும் செயலைச் செய்திருந்தால்; அல்லது

(இ) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகுவதற்கு தவறியிருந்தால்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

அதிகார சபையின் பணியாட் டொகுதியினர்

18. (1) அதிகாரசபையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய –

(அ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரசபையினால் அவசியமென கருதப்படக் கூடியவாறான அத்தகைய பணியாட்டொகுதியினரை நியமிக்கலாம், நீக்கலாம் மற்றும் அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம்;

(ஆ) அதிகாரசபையின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் சேவை நியதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(இ) எந்த வீதங்களில் அத்தகைய அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் ஊதியமளிக்கப்பட வேண்டுமோ அந்த வீதங்களை நிர்ணயிக்கலாம்.

(2) பதினைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, அதிகாரசபையானது இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களுள் எவற்றையும் அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம், ஆயின் எவ்வாறாயினும், அவ்வதிகாரசபை அத்தகைய அலுவலருக்கு கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயலுக்கு அல்லது காரியத்துக்கு பொறுப்பாகவிருத்தலும் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் அதிகாரசபையினால் விதிகள் ஆக்கப்படலாம்.

(4) அதற்கென அதிகாரசபையினால் ஆக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதிகள் எவையேனும் இருப்பின் அவற்றுக்கமையவும் இணங்கவும், அதிகாரசபை இச்சட்டத்தின் நோக்கங்கள் எவற்றுக்கும் அதிகாரசபையைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம், ஆயின் எவ்வாறாயினும், அவ்வதிகாரசபையானது அத்தகைய அதிகாரவளிப்பின்கீழ்

அதிகாரசபையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் அத்தகைய அலுவலரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியத்துக்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(5) அதிகாரசபையின் கோரிக்கையின் பேரில் பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் அத்தகைய அலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபைக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப் படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) அதிகாரசபையானது, குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி யொன்றிற்கு அரசாங்கத்திற்கு சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளி னாலான அதிகாரசபைக்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(9) அதிகாரசபையானது, எவரேனும் ஆள் பின்வருமாறு இருக்குமிடத்து, அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு அத்தகைய ஆளை நியமித்தலாகாது –

(அ) பாரதூரமான துர்நடத்தைக்கு குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளவிடத்து;

(ஆ) துர்ப்பழக்கத்துக்காக பதவியிலிருந்து முன்னர் நீக்கப் பட்டுள்ளவிடத்து; அல்லது

(இ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் ஏற்பாடுகளின் மீறுகையொன்றைப் புரிந்துள்ளவிடத்து.

மத்திய வங்கியின் அலுவலர்களை அதிகார சபையின் பணியாட் டொகுதிக்கு மாற்றுச்சேவை யிலீடுபடுத்தல்

19. (1) அதிகாரசபையின் கோரிக்கையின்பேரில், மத்திய வங்கியின் எவரேனும் அலுவலர் அத்தகைய அலுவலரினதும் மத்தியவங்கியினதும் சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அதிகாரசபையினாலும் மத்திய வங்கியினாலும் உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறான ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனும் ஆள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் தற்காலிக மாகவோ அல்லது நிரந்தரமாகவோ அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுகின்றவிடத்து, அவர், அதிகாரசபையின் வேறு எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் IV

### பணக்கடன் வழங்குநர்கள்

உரிமம்பெற்ற ஆட்கள் பணக் கடன் வழங்கு தொழில் ஒன்றைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்

20. (1) ஆளொருவர், அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமமொன்றுடன் தவிர பணக் கடன்வழங்கு தொழிலொன்றைக் கொண்டுநடாத்துதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவை மீறுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

(3) ஓராம் உட்பிரிவுக்குப் பங்கமின்றி, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வரும் நிறுவனங்களுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) இலங்கை அரசாங்கம், ஒரு மாகாண சபை அல்லது ஒரு உள்ளூரதிகார சபை;

(ஆ) இலங்கை மத்திய வங்கி;

(இ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கருத்தினுள் ஒரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது ஒரு உரிமம்பெற்ற விசேடித்த வங்கி;

(ஈ) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் கருத்தினுள் ஒரு உரிமம்பெற்ற நிதிக் கம்பெனி;

(உ) 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் பதிவு செய்யப்பட்ட குத்தகைக்கு விடும் தாபனம்;

(ஊ) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் மற்றும் மாகாண சபையொன்றின் நியதிச் சட்டமொன்றின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம்;

(எ) 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சமுர்த்தி சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கி அல்லது ஒரு சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற் சங்கம்;

(ஏ) 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் நியதிகளின்படி உருவாக்கப்பட்ட ஒரு உருவகம்;

(ஐ) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் காப்புறுதிக் கம்பெனி;

(ஒ) (90 ஆம் அத்தியாயமான) அடகு பிடிப்போர் கட்டளைச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட எவரேனும் அடகு பிடிப்பவர்;

(ஓ) விசேட சட்டவாக்கமொன்றிற்கிணங்க பணம் கடனாக வழங்குவதற்கு தத்துவமளிக்கப்பட்ட அத்தகைய விசேட சட்டவாக்கத்தினால் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு;

(ஔ) தொடர்புபட்ட கம்பெனிகளுக்கு பணம் கடனாக வழங்கும் ஏதேனும் கம்பெனி;

(க) ஏதேனும் கம்பெனியின் பணிப்பாளர்களுக்கு, அலுவலர்களுக்கு அல்லது ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட நன்மையொன்றாக அத்தகைய ஆட்களுக்கு பணம் கடனாக வழங்கும் அக்கம்பெனி;

(ங) ஒரு வெளிநாட்டு அரசாங்கம் அல்லது ஒரு வெளிநாட்டு அரசாங்கம் சார்பாக செயலாற்றும் ஏதேனும் முகவராண்மை அல்லது நிறுவனம்;

(ச) புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி, சர்வதேச அபிவிருத்திக் கழகம், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், ஆசிய அபிவிருத்தி வங்கி அல்லது வேறு ஏதேனும் பல்புடை கடன் வழங்கும் நிறுவனம்;

(ஞ) இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் பங்குத்தரகர்; அத்துடன்

(ட) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆள்;

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது –

(அ) ஆளொருவரினால் வேறு எவரேனும் ஆளுக்கு குறிப்பிட்டவொரு சந்தர்ப்பத்துக்காக மட்டும் கடனாக வழங்கப்பட்ட ஒரு பணத்தொகை;

(ஆ) முறிகள், தொகுதிக்கடன் பத்திரங்கள் அல்லது கலப்பு தனிசுச் சாதனத்தை உள்ளடக்கக்கூடிய தனிசுச் சாதனமொன்றுக்கான ஒப்பப்பணமாக செலுத்தப்பட்ட ஒரு பணத்தொகை; அத்துடன்

(இ) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து அமைச்சரினால் விலக்களிக்கப்பட்டதாக குறித்துரைக்கப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கலின் ஒரு வகுப்பு அல்லது ஒரு வகுதி.

உரிமம் பெற்ற பணக் கடன் வழங்குநர் ஒருவராக காட்டிநிற்பதற்கெதிரான தடை

21. (1) ஆளொருவர் இச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் உரிமம்பெற்ற பணக் கடன் வழங்குநர் ஒருவராக காட்டிநிற்றல் ஆகாது என்பதுடன் "உரிமம் பெற்ற பணக் கடன் வழங்குநர்" என்ற பெயரை, தலைப்புப்பெயரை அல்லது விவரணத்தை எடுத்தலோ அல்லது பயன்படுத்துதலோ அல்லது ஊகம் மூலம் கடைபிடித்தலோ ஆகாது அல்லது அத்தகைய ஆள் உரிமம்பெற்ற பணக் கடன் வழங்குநர் ஒருவர் என்ற நம்பிக்கையை உட்கிடையாக உருவாக்கும் அல்லது உருவாக்குவதற்கான சாத்தியத்தைக் கொண்டதான ஏதேனும் பெயரை, தலைப்புப்பெயரை அல்லது விவரணத்தை எடுத்தலோ அல்லது பயன்படுத்துதலோ அல்லது ஏதேனும் இடத்தில் இணைத்தலோ அல்லது வெளிக்காட்டி வைத்தலோ ஆகாது.

(2) அதிகாரசபையானது, ஆளொருவரினாலான கொடுக்கல் வாங்கல்களின் அடிக்கடியான தன்மையையும் அவற்றின் பண்புக்கூறுகளையும் கருத்திற்கொண்டு அத்தகை ஆள் பணக் கடன்வழங்கும் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றாரா என தீர்மானிக்கலாம்.

(3) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரி னாலான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன் மீது ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது ஐந்து ஆண்டுகளை விஞ்சாத இருவகையி லொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

உரிம மொன்றுக்கான விண்ணப்பம்

22. (1) பணக்கடன் வழங்குநர் ஒருவரின் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான உரிமமொன்றிற்கான விண்ணப்ப மொன்று, அதற்கென ஆக்கப்பட்ட விதிகளில் தரப்படக்கூடிய வாறான அத்தகைய ஆவணங்கள் அல்லது தகவல்கள் மற்றும் செய்முறைப்படுத்தற் கட்டணமொன்றுடன் சேர்த்து அத்தகைய படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(2) இருபதாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கமைய, பின்வரும் உருவகங்கள் (1) ஆம் உட்பிரிவின்கீழான உரிமமொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு தகவுடையனவாதல் வேண்டும்:-

(அ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனி; அத்துடன் அத்தகைய கம்பெனி 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கருத்தினுள் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியோ, ஒரு கரைகடந்த கம்பெனியோ அல்லது ஒரு கடல்கடந்த கம்பெனியோ அல்ல:

ஆயின் 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியாக கூட்டிணைக்கப் பட்டதுமான ஒரு அரசசார்பற்ற ஒழுங்கமைப்பு இச்சட்டத்தின்கீழ் உரிமத்துக்காக விண்ணப்பிப்பதற்கு தகவுடையதாதல் வேண்டும்;

(ஆ) (83 ஆம் அத்தியாயமான) பங்காண்மை கட்டளைச் சட்டத்தின்கீழ் அல்லது மாகாண சபையொன்றின் ஏதேனும் நியதிச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு பங்காண்மை;

(இ) (123 ஆம் அத்தியாயமான) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பாராளுமன்றச் சட்டமொன்றின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு சங்கம்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி விண்ணப்பமொன்றைப் பெற்றுக்கொள்வதன் மீது அவர் அவசியமெனக் கருதுகின்றவாறு அத்தகைய விசாரணைகளைச் செய்யலாம் என்பதுடன் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அத்தகைய மேலதிக தகவல்களையும் ஆவணங் களையும் கோரலாம்; அத்துடன் விண்ணப்பதாரரின் ஏதேனும் தொழில் இடம் அல்லது இடங்கள் சோதனையிடப்படுவதனைச் செய்விக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதி யினால் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் மேலதிக ஆவணங்கள் அல்லது தகவல்கள் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் விண்ணப்பதாரரினால் வழங்கப்படாத விடத்து, அதிகாரசபையானது இயைபான விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான முடிபு பற்றி அவ்வாளுக்கு அறிவித்து அத்தகைய விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, வீண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டதும் (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒரு விசாரணை அல்லது பரிசோதனையின் மேல் பெறப்பட்ட வாறானதுமான தகவல்களை கவனத்துட்கொண்டதன் பின்னர் ஒன்றில் உரிமத்தை அளிப்பதற்கு அல்லது விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு அதிகாரசபைக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

உரிமமொள்று வழங்குதல்

23. (1) அதிகாரசபையானது 22 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் செய்யப் பட்ட விதப்புரைகளையும் அதிகாரசபையின் அபிப்பிராயத்தில்

இயைபாகவுள்ள வேறு ஏதேனும் கருமத்தையும் கருத்திற் கொண்டு –

(அ) அதிகாரசபை தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய பணக்கடன் வழங்கு தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு விண்ணப்பதாரருக்கு உரிமமொன்றை வழங்கலாம்; அல்லது

(ஆ) 27 ஆம் பிரிவின் ஏற்பாட்டுக்கமைய, விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.

(2) உரிமம் செல்லுபடியாகவுள்ள காலத்தின்போது எச்சந்தர்ப்பத்திலும், அதிகாரசபை உரிமத்தின் நியதி நிபந்தனைகளுள் எவற்றையும் சேர்க்கலாம், அவற்றுள் எவற்றையும் இல்லாதொழிக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

உரிமமொன்றைப் புதுப்பித்தல்

24. (1) (அ) உரிமமளிக்கப்பட்ட பணக்கடன் வழங்குநர் ஒருவரின் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு விரும்புகின்ற (இதனகத்துப்பின்னர் "பணக்கடன் வழங்குநர்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) அவ்வுரிமமளிக்கப்பட்ட பணக்கடன் வழங்குநர், வழங்கப்பட்ட உரிமம் முடிவுறும் தேதிக்கு முன்னர் அறுபது நாட்களுக்குக் குறையாமல் அதற்கான விண்ணப்பத்தைச் செய்வதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) உரிமமொன்றை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், அதற்கென ஆக்கப்பட்ட விதிகளில் தரப்பட்டவாறான அத்தகைய ஆவணங்கள் அல்லது தகவல்கள் மற்றும் செய்முறைப்படுத்தற் கட்டணமொன்றுடன் சேர்த்து அத்தகைய படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும். இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்முறைப்படுத்துவதற்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தின் பின்னர் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பம், இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத நிருவாக விதிப்பனவொன்றுக்கு அமைய, உரிமம் முடிவுறும் தேதிக்கு முன்னர் முப்பது நாட்கள் வரை பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றுக்கொள்ளப் படலாம்.

(3) உரிமமளிக்கப்பட்ட பணக்கடன் வழங்குநர் ஒருவர் இப்பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பிப்பதற்கு தவறுகின்றவிடத்து, அத்தகைய பணக்கடன் வழங்குநர், அவருக்கு வழங்கப்பட்ட உரிமம் முடிவுறும் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியொன்றினுள் புதிய உரிமமொன்றுக்காக விண்ணப்பிப்பதிலிருந்து தடைசெய்யப்படுதல் வேண்டும்.

உரிமத்தின் நிபந்தனைகள்

25. இருபத்து மூன்றாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அல்லது 24 ஆம் பிரிவின்கீழ் புதுப்பிக்கப்பட்ட ஒரு உரிமம் -

(அ) அவ்வுரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் அமைந்ததாகவிருத்தல் வேண்டும்;

(ஆ) அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான வருடாந்த உரிமக்கட்டணமொன்றின் கொடுப்பனவுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்;

(இ) ஓராண்டு காலப்பகுதியொன்றிற்கு செல்லுபடியாதல் வேண்டும்;

(ஈ) முடிவுறும் தேதியைக் குறித்துரைத்தல் வேண்டும்; அத்துடன்

(உ) கைமாற்றப்படத்தக்கதாதலாகாது.

தொழிலிடங்களில் உரிமத்தை வெளிக்காட்டி வைத்தல்

26. பணக்கடன் வழங்குநர் ஒருவர், அதிகாரசபையினால் அவருக்கு வழங்கப்பட்ட மூல உரிமத்தை பிரதான தொழிலிடத்திலும் அத்தகைய உரிமத்தின் பிரதியொன்றை வேறு எல்லா தொழிலிடங்களிலும் துலாம்பரமான ஓர் இடத்தில் எல்லா நேரத்திலும் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

உரிமமொன்றை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுத்தல்

27. (1) பணக்கடன் வழங்கு தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு 22 ஆம் பிரிவின் கீழான உரிமமொன்றுக்காக அல்லது 24 ஆம் பிரிவின் கீழான உரிமமொன்றை புதுப்பிப்பதற்காக விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றவிடத்து, அதிகாரசபை பின்வரும் ஏதுக்களின் எவற்றின் மீதும் விண்ணப்பத்தை மறுக்கலாம்:-

(அ) விண்ணப்பமானது இப்பாகத்திற்கிணங்க செய்யப்படவில்லை;

(ஆ) விண்ணப்பதாரர் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கு தவறியுள்ளார்;

(இ) விண்ணப்பதாரரினால் அதிகாரசபைக்கு கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் பொய்யானது அல்லது பிழைவழியுய்க்கக்கூடியது அல்லது அத்தகவல் அல்லது ஆவணத்தில் முக்கியமான விட்டுவிடுகையொன்றுள்ளது;

(ஈ) உரிமத்தை வழங்குவது அல்லது புதுப்பிப்பது அவரின் கடன் வழங்குநர்களின் அல்லது வேறு அக்கறை கொண்டுள்ளவர்களின் அக்கறைகளுக்கு முரணாக விருக்கும் என அதிகாரசபை அபிப்பிராயம் கொண்டிருத்தல்;

(உ) நாட்டின் நிதித்துறை மற்றும் சமூக பொருளாதார சூழ்நிலைகளுக்கு முரணாகவிருக்கும் என அதிகார சபை அபிப்பிராயம் கொண்டிருத்தல்;

(ஊ) விண்ணப்பதாரரின் பணக்கடன் வழங்கு தொழில் ஒடுக்கப்படுகின்றது அல்லது வேறு வகையாக கலைக்கப் படுகின்றது அல்லது விண்ணப்பதாரர் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் நீதிமன்றத் தினால் பொறுப்புவிடுவிக்கப்படாத கடனிறுக்கவகை யற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப்படுத் தப்படுகின்றார்;

(எ) தீர்ப்புக்கடனொன்று தொடர்பில் விண்ணப்பதாரருக்கு எதிரான நிறைவேற்றுகை முழுமையாக அல்லது பகுதியளவில் திருப்திசெய்யப்படாமல் திருப்பியனுப்பப் பட்டுள்ளது;

(ஏ) பெறுநர் ஒருவர் அல்லது பெறுநர் ஒருவரும் முகாமையாளரும் அல்லது சமமான ஆளொருவர் விண்ணப்பதாரரின் ஏதேனும் ஆதனம் தொடர்பில் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே நியமிக்கப்பட்டுள்ளார்;

(ஐ) இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி விண்ணப்பதாரர், இன்னும் நடைமுறையிலுள்ள இணக்கம் அல்லது ஒழுங்கேற்பாட்டுத் திட்டமொன்றாகவுள்ள இணக்கம் அல்லது ஒழுங்கேற்பாட்டுத் திட்டமொன்றை அவரின் கடன் வழங்குநர்களுடன் செய்துகொண்டுள்ளார்;

(ஒ) விண்ணப்பதாரர் கம்பெனி ஒன்றாக உள்ளவிடத்து, முக்கிய முகாமைத்துவ ஆளணியினருள் எவரேனும் ஒருவர், விண்ணப்பதாரர் சங்கமொன்றாகவுள்ளவிடத்து எவரேனும் பதவிதாங்குநர், விண்ணப்பதாரர் பங்காண்மையொன்றாகவுள்ளவிடத்து எவரேனும் பங்காளர், விண்ணப்பமொன்றை மறுப்பதற்காக இப்பிரிவில் தரப்பட்ட ஏதுக்களுள் எவற்றுக்கும் அமைந்தவராகவுள்ளார்; அல்லது

(ஓ) அதிகாரசபையானது, விடயத்துக்கேற்ப விண்ணப்பதாரர், அல்லது அவரது முக்கிய முகாமைத்துவ ஆளணியினருள் எவரேனும் ஒருவர், பதவி தாங்குநர் அல்லது பங்காளர், அவரின் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பு, பண்பு, நிதிசார் ஒருமைப்பாடு மற்றும் நம்பகத்தன்மையைக் கருத்திற்கொண்டு அவர்களின் மிகச் சிறந்த அக்கறையில் செயலாற்ற முடியாதுள்ளார் என நம்புவதற்கான காரணத்தைக் கொண்டுள்ளது.

(2) முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் ஒருவர் 40 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள ஏதேனும் தகைமையீனத்துக்கு அமைந்தவராகவுள்ளார் என பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்கின்றவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய தீர்மானத்தை முப்பது நாட்களினுள் எழுத்தில் விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும்:

ஆயின், பணிப்பாளர் தலைமையதிபதி, விண்ணப்பதாரரின் விண்ணப்பம் செய்முறைப்படுத்தப்பட வேண்டுமாயின், சம்பந்தப்பட்ட அம்முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அத்தகைய பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றார் என அவருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அவரது விண்ணப்பம் செய்முறைப்படுத்தப்

படுவதனை ஆரம்பிப்பதற்கென அத்தகைய பதவி நீக்குகைபற்றி பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தலும் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, விண்ணப்பதாரருக்கு கேட்கப் படுவதற்கான வாய்ப்பொன்றை வழங்காமல் உரிமமொன்றை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுத்தலாகாது.

வழங்கப்பட்ட உரிமமொன்றை இல்லாதாக்குதல்.

28. (1) இப்பாகத்தின்கீழ் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமம், அதற்கென உரிமமளிக்கப்பட்டவருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பொன்றின் மூலம் எந்நேரத்திலும் பின்வரும் சந்தர்ப்பங்களில் இல்லாதாக்கப்படலாம்–

(அ) 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறான எந்த ஏதுவின் மீது அதிகாரசபை உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்றை மறுக்கலாமோ அத்தகைய ஏது உள்ளவிடத்து;

(ஆ) பணக்கடன் வழங்குநர் அவரது உரிமம் தொடர்பில் ஏதேனும் நிபந்தனை அல்லது மட்டுப்பாட்டை மீறியுள்ளவிடத்து;

(இ) பணக்கடன் வழங்குநர் விடயத்துக்கேற்ப அவரைப் பிணிக்கின்ற ஏதேனும் விதியை மீறியுள்ளவிடத்து;

(ஈ) பணக்கடன் வழங்குநர் அதிகாரசபைக்கு பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது செம்மையற்ற தகவலை வழங்கியுள்ளவிடத்து அல்லது முக்கியமான நிகழ்வுகளை மறைக்கின்றவிடத்து அல்லது வெளிவிடுவதற்கு தவறுகின்றவிடத்து அல்லது முக்கியமான பிறழ்பிரதிநிதித்துவமொன்றின் மீது அவருக்கு உரிமமளிக்கப்பட்டுள்ளவிடத்து;

(உ) பணக்கடன் வழங்குநர் இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட வருடாந்த உரிமக் கட்டணத்தை அல்லது ஏதேனும் நிருவாக விதிப்பனவைச் செலுத்துவதற்கு தவறியுள்ளவிடத்து;

(ஊ) பணக்கடன் வழங்குநர் உரிமம் வழங்கியதிலிருந்து ஒன்பது மாதங்களினுள் தொழிலைத் தொடங்குவதற்கு தவறியுள்ளவிடத்து;

(எ) பணக்கடன் வழங்குதொழில் ஒழித்துக்கட்டப்படுகின்றவிடத்து அல்லது முடக்கப்படுகின்றவிடத்து அல்லது வேறு வகையாக கலைக்கப்படுகின்றவிடத்து;

(ஏ) பணக்கடன் வழங்குநர் பணக்கடன் வழங்கு தொழிலை கொண்டுநடாத்தாது இல்லாதொழிந்துள்ளவிடத்து;

(ஐ) பணக்கடன் வழங்குநர், அவரது கடன்வழங்குநர்களின் மற்றும் வேறு எவரேனும் அக்கறைகொண்டவரின் அக்கறைக்கு தீங்குவிளைவிக்கக்கூடிய முறையொன்றில் அவரது தொழிலைக் கொண்டுநடாத்துகின்றவிடத்து; அல்லது

(ஒ) பணக்கடன் வழங்கு தொழில், இச்சட்டத்தின் 40 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள ஏதேனும் தகைமையீனத்துக்கு அமைந்தவராகவுள்ள –

(i) முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் ஒருவரைக் கொண்டுள்ளவிடத்து;

(ii) எவரேனும் பதவி தாங்குநரைக் கொண்டுள்ளவிடத்து; அல்லது

(iii) எவரேனும் பங்காளரைக் கொண்டுள்ளவிடத்து.

*(2)* இப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பணக்கடன் வழங்குநர் ஒருவருக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றை இல்லாதாக்குவதற்கு முன்னர், பணக்கடன் வழங்குநருக்கு அத்தகைய நிகழ்வு பற்றிய எழுத்திலான அறிவித்தலொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

*(3)* பணக்கடன் வழங்குநர் அத்தகைய அறிவித்தலைப் பெற்றுக்கொண்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள், அவரது உரிமம் ஏன் இல்லாதாக்கப்படுதலாகாது என்பது பற்றி அதிகாரசபைக்கு போதிய காரணம் காட்டலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பணக்கடன் வழங்குநரினால் வழங்கப்பட்ட காரணங்களைக் கவனத்துட்கொண்டதன் பின்னர், அதிகாரசபை அறிவித்தல் வழங்கியதிலிருந்து தொண்ணூறு நாட்களினுள் -

(அ) அத்தகைய அறிவித்தலை மீளப்பெறலாம்; அல்லது

(ஆ) பணக்கடன் வழங்குநருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்று இல்லாதாக்கப்படுகின்ற பட்சத்தில், சம்பந்தப்பட்ட பணக்கடன் வழங்குநருக்கு அத்தகைய இல்லாதாக்குகை பற்றி உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் உரிமத்தின் இல்லாதாக்குகை, அத்தகைய இல்லாதாக்குகைத் தேதியன்று அல்லது அதிகாரசபை தோதானதெனக் கருதுகின்றவாறான ஒரு பிந்திய தேதியன்று பயனுறுதலும் வேண்டும். அதிகாரசபையானது, இலங்கையில் புழக்கத்திலுள்ள சிங்கள தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்த செய்தித்தாள்களுள் ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது ஒன்றில் அத்தகைய இல்லாதாக்குகை பற்றிய அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

உரிமமொன்றின் தன்னிச்சையான இல்லாதாக்குகை

29. (1) பணக் கடன் வழங்குநர் ஒருவர் அவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குவதற்கு எந்நேரத்திலும் அதிகார சபையிடம் கோரலாம்.

(2) அதிகாரசபையானது, அத்தகைய கோரிக்கையை கவனத்துட்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பணக்கடன் வழங்குநரின் கோரிக்கையை மறுப்பதற்கான காரணம் எதுவும் இல்லாதிருப்பின், அத்தகைய உரிமத்தை இல்லாதாக்கலாம்.

இல்லாதாக்குகையின் மேல் பணக்கடன் வழங்குநர் உரிமத்தை ஒப்படைத்தல் வேண்டும்

30. (1) இருபத்தெட்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 29 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்று அதிகாரசபையினால் இல்லாதாக்கப்பட்டுள்ளபோதெல்லாம், பணக்கடன் வழங்குநர் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உரிமத்தை உடனடியாக ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் பணக்கடன் வழங்குநர், அத்தகைய பணக்கடன் வழங்குநர்

உரிமமளிக்கப்பட்ட பணக்கடன் வழங்குநர் ஒருவர் என விளம்பரப்படுத்துகின்ற அவரது தொழில் இடங்களில் உள்ள ஏதேனும் பொருளை அகற்றுதலும் வேண்டும்.

(2) இருபத்தேழாம் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் உரிமமொன்றை புதுப்பிப்பதற்கான மறுப்பு அல்லது 28 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்றின் இல்லாதாக்குகை, அத்தகைய இல்லாதாக்குகைக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் பணக்கடன் வழங்கும் உடன்படிக்கையை பாதித்தலாகாது என்பதுடன் உரிமம் செல்லுபடியாகும் காலத்தின்போது வழங்கப்பட்ட ஏதேனும் கடனை அறவிடுவதிலிருந்து அத்தகைய எவரேனும் பணக்கடன் வழங்குநரை பாதித்தலுமாகாது.

(3) இருபத்தேழாம் பிரிவின்கீழான உரிமமொன்றை வழங்குவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான மறுப்பு அல்லது 28 ஆம் பிரிவின்கீழ் அதிகாரசபையினாலான உரிமமொன்றின் இல்லாதாக்குகை, இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அத்தகைய பணக்கடன் வழங்குநருக்கு எதிராக ஏதேனும் வழக்குத் தொடுத்தலை அல்லது பேணுதலை பாதித்தலாகாது அல்லது பங்கப்படுத்துதலாகாது.

*தொழில் வகைகள் பணக்கடன் வழங்குநர் ஒருவரினால் கொண்டு நடாத்தப்படலாம்*

31. பணக்கடன் வழங்குநர் ஒருவர், இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அல்லது அத்தகைய பணக்கடன் வழங்குநருக்கு வழங்கப்பட்ட உரிமத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அத்தகைய தொழில் வகைகளைக் கொண்டு நடாத்தலாம்.

## பாகம் V

## நுண்நிதித் தொழில்

*உரிமமளிக்கப்பட்ட ஆட்கள் நுண்நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்*

32. (1) இச்சட்டத்தின்கீழ் நுண்நிதித் தொழிலை கொண்டு நடாத்துவதற்கு உரிமமளிக்கப்பட்ட ஆளொருவர் அல்லது 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ), (ஈ), (உ), (ஊ) மற்றும் (எ) என்னும் பந்திகளின்கீழ் விலக்களிக்கப்பட்ட ஆளொருவர் தவிர்ந்த ஆளெவரும் நுண்நிதித்தொழிலைக் கொண்டுநடாத்துதலாகாது.

(2) செல்லுபடியான உரிமமொன்றின்றி நுண்நிதித்தொழிலை கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்துவதாக எவ்வழியிலும் விளம்பரப்படுத்துகின்ற அல்லது அவராகவே அறிவிக்கின்ற அல்லது அவரைக் காட்டி நிற்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

(3) ஆளொருவர், இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட பணக்கடன் வழங்குநர் ஒருவராகவிருந்தாலொழிய, நுண்நிதி நிறுவனம் ஒன்றாக உரிமமளிக்கப்படுவதற்கு அத்தகைய ஆள் தகவுடையவராதலாகாது என்பதுடன் அத்தகைய ஆள் ஒன்றில் -

(அ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பெனியாக விருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கம்பெனி 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கருத்தினுள் உத்தரவாதத்தால் வரையறுக்கப் பட்ட ஒரு கம்பெனி, ஒரு தனியார் கம்பெனி, ஒரு கரை கடந்த கம்பெனி அல்லது ஒரு கடல்கடந்த கம்பெனி அல்ல; அல்லது

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வைசெய்தலும்) சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப் பட்டதும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியாக பதிவுசெய்யப் பட்டதுமான ஒரு அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான ஆளொருவர், நுண்நிதித் தொழிலொன்றைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமமொன்றுக்கு விண்ணப்பிக்கலாம்; அவ்விண்ணப்பம், அதற்கென ஆக்கப்பட்ட விதிகளில் தரப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய ஆவணங்கள் அல்லது தகவல்களுடன் சேர்த்து பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(5) இருபத்திரண்டாம் பிரிவின் (3), (4), (5) ஆகிய உட்பிரிவுகள் மற்றும் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு மற்றும் (4) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தை செய்முறைப்

படுத்துவதற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) அதிகாரசபையானது, பணக்கடன் வழங்கு தொழிலைக் கொண்டுநடாத்தும் காலப்பகுதியின்போது விண்ணப்பதாரரின் கடந்தகால நடத்தை பற்றி பணிப்பாளர் தலைமையதிபதியினால் தரப்பட்டுள்ள காரணங்களை, இச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள கருமங்கள் மற்றும் அதன் அபிப்பிராயத்தில் விசாரணை தேவையாகவுள்ள அத்தகைய வேறு எவையேனும் கருமங்களைக் கருத்திற்கொண்டு –

(அ) அதிகாரசபை தகுதியானதென கருதுகின்றவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய நுண்நிதித் தொழிலொன்றை கொண்டு நடாத்துவதற்கு விண்ணப்ப தாரருக்கு உரிமமொன்றை வழங்கலாம்; அல்லது

(ஆ) அதிகாரசபை தகுதியானதென கருதுகின்றவாறு 27 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.

(7) அதிகாரசபை, உரிமமொன்று செல்லுபடியாகும் காலத்தின்போது எந்நேரத்திலும் உரிமத்தின் நிபந்தனைகளுள் எவற்றுக்கும் எதனையும் சேர்க்கலாம், அவற்றை இல்லா தொழிக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(8) நுண்நிதித் தொழிலொன்றைக் கொண்டுநடாத்துவதற்கான உரிமமொன்று பணக்கடன் வழங்குநர் ஒருவருக்கு வழங்கப் படுவதன் மேல், 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணக்கடன் வழங்கு தொழிலொன்றைக் கொண்டுநடாத்துவதற்கு அத்தகைய பணக்கடன் வழங்குநருக்கு வழங்கப்பட்ட உரிமம் இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பணக் கடன் வழங்குநர் -

(அ) பணக்கடன் வழங்கு தொழிலொன்றைக் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமத்தை உடனடியாக அதிகாரசபைக்கு ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உரிமத்தை அல்லது அதன் பிரதியொன்றை அவரின் தொழில் இடங்களுள் எவற்றிலும் காட்சிப்படுத்துதலு மாகாது; அத்துடன்

(ஆ) (6)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை பிரதான தொழிலிடத்திலும் அத்தகைய உரிமத்தின் பிரதியொன்றை வேறு எல்லா தொழில் இடங்களிலும் துலாம்பரமான இடமொன்றில் எல்லா நேரத்திலும் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

(9) இருபத்துநான்காம், 25, 26, 27, 28, 29 ஆம் மற்றும் 30 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், (இதனகத்துப்பின்னர் "நுண்நிதி நிறுவனம்" ஒன்று எனக் குறிப்பீடு செய்யப்படும்) (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனமொன்றுக்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(10) நுண்நிதி நிறுவனமொன்று, இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் விதிக்கப் படக்கூடியவாறான அல்லது அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட உரிமத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனை களுக்கமைய இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள வாறான அத்தகைய தொழில் வகைகளைக் கொண்டுநடாத்தலாம்.

(11) (அ) கடன்பெறுநர்களுக்கு நுண்கடன் காப்புறுதியை வழங்கும் நோக்கத்துக்காக மட்டும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகள்; அத்துடன்

(ஆ) கடன்பெறுநர்களுக்கு நுண் குத்தகைக்கு விடும் வசதிகளை வழங்கும் நோக்கத்துக்காக மட்டும் 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் ஏற்பாடுகள்,

நுண்நிதி நிறுவனமொன்றுக்கு ஏற்புடையனவாதலாகாது என்பதுடன் நுண்நிதி நிறுவனமொன்று அந்நோக்கத்துக்காக அதிகாரசபையினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய அத்தகைய தொழிலைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

நுண்நிதி நிறுவனங்களுக்கான குறிப்பிட்ட பணிப்புகள்

*33.* (1) அதிகாரசபையானது, 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு பங்கமில்லாமல், பின்வருவன தொடர்பாக நுண்நிதி நிறுவனங்களுக்கு அல்லது ஏதேனும் தனி நுண்நிதி நிறுவனத்துக்கு அல்லது நுண்நிதி நிறுவனங்களின் ஏதேனும் குழுவுக்கு அல்லது வகுதிக்கு பணிப்புகளை வழங்கலாம் -

(அ) எந்த நியதிநிபந்தனைகளின் கீழ் வைப்புக்கள் இணையுறுவாக அத்தகைய நுண்நிதி நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படலாமோ அந்த நியதிநிபந்தனைகள், அத்தகைய வைப்புக்களின்மீது செலுத்தப்படற்பாலதான அதிகபட்ச வட்டி வீதங்கள், எந்த காலப்பகுதிக்கு வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படலாமோ அந்த அதிகபட்ச காலப்பகுதி மற்றும் வாடிக்கையாளரொருவரினால் நிறுவனமொன்றில் வைப்பிலிடப்படக்கூடிய அதிகபட்ச தொகை;

(ஆ) எந்த நியதி நிபந்தனைகளின்கீழ் முதலீடுகள் செய்யப்படலாமோ அந்த நியதி நிபந்தனைகள் மற்றும் அத்தகைய முதலீடுகளின் அதிகபட்ச அனுமதிக்கத்தக்க முதிர்வுகள்;

(இ) ஒதுக்கு நிதியமொன்றைத் தாபித்தல், அத்தகைய நிதியத்துக்கு கைமாற்றப்படவேண்டிய வரி இலாபத்தின் பின்னரான குறைந்தபட்ச ஆண்டு வீதம் மற்றும் அத்தகைய நிதியத்தின் வேறு தொழிற்பாட்டுசார் அம்சங்கள்;

(ஈ) குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடு; அத்துடன்

(உ) நுண்நிதி நிறுவனமொன்றினால் குறைந்த வருமானம் பெறும் ஆட்களுக்கும் நுண் தொழில்முயற்சிகளுக்கும் வழங்கப்பட்ட நிலுவையாகவுள்ள நிதிவசதியின் குறைந்தபட்ச விகிதம், அத்தகைய நுண்நிதி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிலுவையாகவுள்ள நிதிவசதிக்கு எந்தக் குறைந்தபட்ச விகிதத்தைக் கொண்டிருக்கவேண்டுமோ நிலுவையாகவுள்ள நிதிவசதியின் அந்தக் குறைந்தபட்ச விகிதம்.

(2) ஓராம் உப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஏதேனும் நுண்நிதி நிறுவனம் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத நிருவாக விதிப்பனவொன்றைச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படலாம்.

## பாகம் VI

## பணக்கடன் வழங்குநர்கள் மற்றும் நுண்நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல்

34. (1) (இதனகத்துப்பின்னர் "உரிமமளிக்கப்பட்டவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணக்கடன் வழங்கு தொழிலொன்றை அல்லது நுண்நிதித் தொழிலொன்றைக் கொண்டுநடாத்தும் ஆளொருவர் பணிப்பாளர் தலைமையதிபதியின் முன்னங்கீகாரமின்றி — ஒழுங்கு படுத்தும் அங்கீகாரம்

(அ) ஏதேனும் புதிய தொழிலிடத்தைத் திறத்தலாகாது;

(ஆ) அவரது தனிசு சேகரிப்புப்பணி, கடன் அறவிடுதல் அல்லது ஒத்த ஒழுங்கேற்பாட்டுக்கு வெளிச்சேவையைப் பெறுதலாகாது;

(இ) கம்பெனியொன்றின் விடயத்தில் -

(i) துணைநிலைக் கம்பெனியொன்றைத் தாபித்தலாகாது;

(ii) அதன் அமைப்பக விதிகளை திருத்துதலாகாது;

(iii) பணிப்பாளர் சபைக்கு புதிய உறுப்பினர்களை நியமித்தலாகாது; அல்லது

(iv) அதன் மூலதனத்தைக் குறைத்தலாகாது;

(ஈ) சங்கமொன்றின் விடயத்தில், பதவி தாங்குநர்களை மாற்றுதலாகாது; அல்லது

(உ) பங்காண்மையொன்றின் விடயத்தில், பங்காளர் ஒருவரை மாற்றுதல் ஆகாது.

*(2)* ஓராம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு பணிப்பாளர் தலைமையதிபதியின் முன்னங்கீகாரத்தைப் பெறுவதற்கு தவறுகின்ற எவரேனும் உரிமமளிக்கப்பட்டவர், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத நிருவாக விதிப்பனவொன்றாக ஒரு பணத்தொகையைச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப் படலாம்.

*(3)* பணிப்பாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் அங்கீகாரம் வழங்கப்படும்போது அவசியமெனக் கருதப்படின் உரிமமளிக்கப்பட்ட ஒருவருக்கு பணிப்புக்களை வழங்கலாம்.

குறித்தசில நிகழ்வுகளை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல்

*35.* எல்லா உரிமமளிக்கப்பட்டவர்களும் பின்வரும் நிகழ்வுகளை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக எழுத்தில் அறிவித்தல் வேண்டும்:-

(அ) அவரது கடப்பாடுகளை எதிர்கொள்வதற்கு இயலாதவராகவிருத்தல் அல்லது கடனிறுக்க வகையற்றவராக வருகின்ற தறுவாயிலிருத்தல்;

(ஆ) கம்பெனியொன்றின் விடயத்தில், உரிமமளிக்கப் பட்டவரை ஒழித்துக்கட்டுவதற்காக நீதிமன்றத்தில் கோப்பிடப்படுகின்ற ஏதேனும் வழக்கு;

(இ) சட்டநீதிமன்றமொன்றில் உரிமமளிக்கப்பட்ட ஒருவரினால் வங்கிமுறிந்தமைக்கு கோப்பிடப்பட்ட ஏதேனும் வழக்கு;

(ஈ) சங்கமொன்றின் விடயத்தில், கலைத்தல் அல்லது ஒடுக்குதல்; அல்லது

(உ) பங்காண்மையொன்றின் விடயத்தில் கலைத்தல்.

ஒழித்துக் கட்டுதல், கலைத்தல் அல்லது ஒடுக்குதல் விடயத்தில் சட்டம் தொடர்ந்து ஏற்புடையதாதல் வேண்டும்

*36.* விடயத்துக்கேற்ப கம்பெனியொன்றின், பங்காண்மை யொன்றின் அல்லது சங்கமொன்றின் பணிப்பாளர் சபை, பங்காளர்கள் அல்லது பதவிதாங்குநர்கள், ஒழித்துக்கட்டுதல், கலைத்தல் அல்லது ஒடுக்குதல் செய்முறையின்போது அதிகாரசபை அவசியமெனக் கருதக்கூடியவாறாக இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, விதி, தீர்மானம் அல்லது பணிப்பின் ஏற்பாடுகளுக்கு தொடர்ந்து அமைந்தவராதல் வேண்டும்.

உரிமமளிக்கப் பட்டவர் களுக்கான பணிப்புகள்

37. (1) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் மற்றும் 33 ஆம் பிரிவின்கீழ் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களுக்கு மேலதிகமாக, அதிகாரசபை, எந்த முறையில் அத்தகைய உரிமமளிக்கப்பட்டவர்களின் தொழிலின் ஏதேனும் அம்சம் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட அலுவல்கள் நடாத்தப்படவுள்ளதோ அந்த முறை பற்றியும் குறிப்பாக பின்வருவனபற்றியும் பணிப்புகளை வழங்குதல் வேண்டும்.

(அ) தரகுகள், கழிப்பனவுகள், கட்டணங்கள், தண்டங்கள் அல்லது எத்தகையனவுமான வேறு பெறுகைகள் அல்லது கொடுப்பனவுகள் என்ற வகையாக விதிப்பனவு செய்யப்படக்கூடிய அதிகபட்ச வீதங்கள் அல்லது தொகைகள்;

(ஆ) கடன்கள் அல்லது வேறு எவையேனும் நிதி வசதிகள்மீது விதிப்பனவு செய்யப்படும் வட்டியைக் கணக்கிடும் விதமும் முறையும்;

(இ) கடன் அறவிடுதல் அல்லது வேறு ஏதேனும் ஒத்த ஒழுங்கேற்பாட்டினூடாக தனிசைச் சேகரித்தல் உட்பட தனிசு சேகரித்தல்;

(ஈ) பல்வேறு வகையினவான கடன்கள் அல்லது வேறு ஏதேனும் வகையினதான நிதி வசதிக்காக தேவைப் படுத்தக்கூடிய அல்லது அனுமதிக்கப்படக்கூடிய பிணைப்பொறுப்பின் தன்மை மற்றும் தொகை;

(உ) பேணப்படவேண்டிய மூலதனம் அல்லது தேறிய சொத்துக்களின் குறைந்தபட்ச தொகை;

(ஊ) பின்பற்றப்படவேண்டிய உள்ளக கட்டுப்பாடுகள், ஆபத்து முகாமைத்துவம் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஆளுகை பற்றிய கோட்பாடுகள்;

(எ) ஆளுகை பற்றிய கோவையொன்றையும் நடத்தைக் கோவையொன்றையும் நடைமுறைப்படுத்தல்;

(ஏ) பின்வருபவர்களின் தகுதி மற்றும் பொருத்தத்தை மதிப்பிடுவதற்கான கட்டளைக்கற்கள் -

(i) கம்பெனியொன்றின் விடயத்தில் பணிப்பாளர்கள், முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் பங்குதாரர்கள்;

(ii) சங்கமொன்றின் விடயத்தில் பதவி தாங்குநர்கள்; அல்லது

(iii) பங்காண்மையொன்றின் விடயத்தில், பங்காளர்கள்.

(ஐ) கூட்டிணைப்பு மற்றும் தொழில், அலுவல்களுக்கான கட்டமைப்புசார் மாற்றங்களின் மீதான மட்டுப்பாடுகள்;

(ஒ) புத்தகங்கள் மற்றும் கணக்குகள் அல்லது வேறு பதிவேடுகள் அல்லது ஆவணங்களைப் பேணும் படிவம் மற்றும் முறை;

(ஓ) வாடிக்கையாளர்களுக்கு தகவல்களை வெளிவிடும் படிவம் மற்றும் முறை;

(ஔ) வாடிக்கையாளர்களுடனான இடைச் செயலாற்றுகைக்கு உட்படுகின்ற கடன் வழங்குகை, அறவிடுகை, சந்தைப்படுத்துகை, முறைப்பாடுகளின் கையாளுகை, வாடிக்கையாளர் சேவைகள் மற்றும் வேறு ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள உரிமமளிக்கப்பட்டவர்களின் ஊழியர்களின் கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் தகுதிக்கான குறைந்தபட்ச தேவைப்பாடுகள்;

(க) கடன்பெறுநர் ஒருவரின் மொத்தத் தனிசு அத்தகைய கடன்பெறுநரின் மொத்த வருமானத்துக்கு எந்த அதிகபட்ச விகிதத்தைக் கொண்டிருக்கவேண்டுமோ அந்த அதிகபட்ச விகிதம்;

(ங) ஏதேனும் அச்சு அல்லது இலத்திரனியல் ஊடகத்தில் கடன் மதிப்பீடு, நிதிக் கூற்றுக்கள், விளம்பரங்கள் அல்லது வேறு ஏதேனும் சந்தைப்படுத்தல் பொருட்கள் உட்பட ஏதேனும் தரவு, தகவல், அறிக்கையின் வெளியீடு;

(ச) முகவர்களினதும் பிரதிநிதிகளினதும் பயன்பாடு மற்றும் கடன் அறவிடுகைகள் உட்பட சந்தை நடத்தையை ஒழுங்குபடுத்துதல்;

(ஞ) ஆலோசனையளித்தல் மற்றும் மதியுரைச்சேவைகளை வழங்குவதற்கு கடன் ஆலோசனையளிக்கும் நிலையங்களைத் தாபித்தல்;

(ட) வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளைக் கையாளுதல்; அத்துடன்

(ண) எவையேனும் இலத்திரனியல் வழிவகைகளைப் பயன்படுத்தி நிறைவேற்றப்படும் பணக்கடன் வழங்குதொழில் மற்றும் நுண்நிதித் தொழிலை ஒழுங்குபடுத்தல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற எவரேனும் உரிமமளிக்கப்பட்டவர், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத நிருவாக விதிப்பனவொன்றாக ஒரு பணத்தொகையைச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படலாம்.

(3) அதிகாரசபை உரிமமளிக்கப்பட்ட ஒருவரின் கொளிக் கம்பெனியொன்றிற்கு, ஏதேனும் துணைநிலைக் கம்பெனிக்கு அல்லது இணைக் கம்பெனியொன்றுக்கு, அத்தகைய கம்பெனியின் தொழிலின் ஏதேனும் அம்சம் எந்த முறையில் நடாத்தப்படவேண்டுமோ அந்த முறை சம்பந்தமான பணிப்புகளை வழங்கலாம்:

ஆயின், இப்பிரிவின் ஏற்பாடுகள், ஏதேனும் நிதித் துறையை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையை ஒழுங்குபடுத்துவதற்கு அமைந்ததான ஒரு கொளிக் கம்பெனிக்கு, துணைநிலைக் கம்பெனிக்கு அல்லது இணைக் கம்பெனிக்கு ஏற்புடையனவாத லாகாது.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற உரிமமளிக்கப்பட்டவரொருவரின் ஏதேனும் கொளிக் கம்பெனி, துணைநிலைக்

கம்பெனி அல்லது இணைக் கம்பெனி அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத நிருவாக விதிப்பனவொன்றாக ஒரு பணத்தொகையைச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படலாம்.

அதிகாரசபை விதிகளை ஆக்கலாம்

38. (1) அதிகாரசபையானது, காலத்துக்குக் காலம், பின்வருவனவுட்பட இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையின் அல்லது அதன் அலுவலர்களுள் எவரினதும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகம், புரிகை மற்றும் நிறைவேற்றுகை என்பவற்றுடன் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான ஏதேனும் கருமம் தொடர்பாக அது அவசியமென கருதுகின்றவாறான அத்தகைய விதிகளை ஆக்கலாம்.

(அ) அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகம்;

(ஆ) ஊழியர்களின் நியமனம், பதவியுயர்வு, ஊதியம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைமுறை மற்றும் அத்தகைய ஊழியர்களின் லீவு மற்றும் வேறு வேதனாதிகளை வழங்குதல்;

(இ) அதிகாரசபையின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் சேவையின் நியதிநிபந்தனைகள்;

(ஈ) அதிகாரசபையின் நிதியத்திலிருந்தான பணக் கொடுப்பனவு;

(உ) அதிகாரசபையினால் அளிக்கப்பட்ட ஏதேனும் சேவைக்கான கட்டணங்கள் அல்லது விதிப்பனவுகளை அறவிடுதல்;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் உரிமமளிப்பதற்கான கட்டளைக்கற்கள்;

(எ) உரிமமொன்றிற்கான விண்ணப்பமொன்றிற்கான செய்முறைப்படுத்தற் கட்டணம்;

(ஏ) உரிமம் பெற்றவொருவரினால் அதிகாரசபைக்கு செலுத்தப்படற்பாலதான வருடாந்த உரிமக் கட்டணம்;

(ஐ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்கள், ஆவணங்கள் அல்லது தகவல்கள்;

(ஒ) 51 ஆம் பிரிவின்கீழ் விசாரணைகளை நடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(ஓ) மத்திய வங்கியினால் வழங்கப்படும் அத்தகைய வழிகாட்டுநெறிகளுக்கு பயன்கொடுத்தல்; அத்துடன்

(ஔ) அதிகாரசபையின் அலுவல்களுடன் சம்பந்தப்பட்ட வேறு ஏதேனும் கருமம்.

(2) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை

39. (1) உரிமமளிக்கப்பட்டவரொருவர் -

(அ) அவரது கடன் வழங்குநர்களினதும் வேறு அக்கறை கொண்டவர்களினதும் அக்கறைக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய பொருத்தமற்ற அல்லது முறையீனமான நிதிசார் செயல் முறைகளைக் கொண்டுநடாத்துகிறார் அல்லது அவரது தொழிலைக் கொண்டுநடாத்தும் செயன் முறையில் பொருத்தமற்ற அல்லது முறையீனமான நிதிசார் செயல்முறைகளைப் பின்பற்றுகிறார் என; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பு, விதி, கட்டளை அல்லது தேவைப்பாட்டை மீறியுள்ளார் அல்லது அவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு தவறி யுள்ளார் என,

அதிகாரசபை அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அதிகார சபை பின்வரும் நடவடிக்கைகளுள் ஏதேனும் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டதை எடுத்தல் வேண்டும்:-

(i) அத்தகைய செயல்முறையை இல்லாதொழிக்கும் படி அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரைப் பணித்தல்;

(ii) அத்தகைய உரிமமளிக்கப்பட்டவர் இணங்கியொழுகுவதற்கு தவறியுள்ள இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட பணிப்பு, விதி, கட்டளை அல்லது தேவைப்பாட்டுடன் உடனடியாக அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரைப் பணித்தல்;

(iii) அத்தகைய செயல்முறை அல்லது மீறுகையிலிருந்து விளைவாகவரும் எதிர்மறையான நிலைமைகளைத் திருத்துவதற்கு அவசியமான நடவடிக்கையை எடுப்பதற்கு அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரைப் பணித்தல்;

(iv) உரிமமளிக்கப்பட்டவரிடத்தில் அல்லது அவர் தொடர்பாக ஏதேனும் பணியை நிறைவேற்றுவதிலிருந்து உரிமமளிக்கப்பட்டவரின் எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர், ஊழியர், பங்காளர், பதவிதாங்குநர் அல்லது கட்டுப்பாட்டாளரைத் தடைசெய்தல்;

(v) உரிமமளிக்கப்பட்டவரின் எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர், பங்காளர், பதவிதாங்குநர் அல்லது ஊழியரை பதவியிலிருந்து அகற்றுதல்;

(vi) விடயத்துக்கேற்ப உரிமமளிக்கப்பட்டவர், பணிப்பாளர் சபையின் எவரேனும் உறுப்பினர், முகாமையாளர், ஊழியர், பங்காளர் அல்லது

பதவிதாங்குநர் மீது இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றை நிருவாக விதிப்பனவொன்றாக விதித்தல்;

(vii) ஏதேனும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் கடன்பெறுநர்களினதும் வேறு எவர்களேனும் அக்கறை கொண்டவர்களினதும் அக்கறைகளுக்கும் புத்திசாதுரியமான வர்த்தக செயல்முறைகளுக்கும் உரிய கவனம் செலுத்தாமல் செய்துகொள்ளப்பட்டுள்ளது என அது கருதுகின்றவிடத்து, உரிமமளிக்கப்பட்டவருடன் வாடிக்கையாளர் ஒருவரினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் செய்துகொள்ளப்பட்ட அத்தகைய உடன்படிக்கையை அல்லது ஒப்பந்தத்தை மீளாய்வு செய்தல் மற்றும் மீள்கொடுப்பனவு, வட்டி வீதங்கள் மற்றும் விதிப்பனவுகள் தொடர்பான நியதிகள் உட்பட அத்தகைய உடன்படிக்கையின் அல்லது ஒப்பந்தத்தின் நியதிகளை வேறுபடுத்தல்; அல்லது

(viii) உரிமமளிக்கப்பட்டவரின் எந்தப் பெயர் சம்பந்தமாக அதிகாரசபை பாரதூரமான மேற்பார்வை அக்கறைகளைக் கொண்டுள்ளதோ அந்தப் பெயரை விடயத்துக்கேற்ப பணக்கடன் வழங்குநர் ஒருவராக அல்லது நுண்நிதி நிறுவனமாக வெளியிடுதல்.

*(2)* ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒரு கட்டளையுடன் அல்லது பணிப்புடன் இணங்கியொழுகுவதற்கு அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்தைச் செலுத்துவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

*(3)* ஓராம் உட்பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கையினால் இன்னலுற்ற எவரேனும் ஆள், அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்கள் முடிவுறுவதற்கு முன்னர் அதிகாரசபைக்கு எழுத்தில்

மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் அதிகாரசபையானது அத்தகைய மேன்முறையீட்டைப் பெற்றதிலிருந்து தொண்ணூறு நாட்களினுள் அதன் முடிபை வழங்குதலும் வேண்டும்.

பதவி வகிப்பதற்கான தகைமையீனம்

40. ஆளொருவர் பின்வருமாறு இருப்பின் விடயத்துக்கேற்ப உரிமமளிக்கப்பட்டவரொருவரின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் ஒருவராக, பங்காளராக அல்லது பதவிதாங்குநர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தேர்ந்தெடுக்கப் படுவதிலிருந்து அல்லது அத்தகைய பதவியை வகிப்பதிலிருந்து அத்தகைய ஆள் தகைமையற்றவராதல் வேண்டும்-

(அ) தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவ ராகவிருப்பின் அல்லது மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் அல்லது வேறு ஏதேனும் முறையீனமான நடத்தைக்கு உட்பட்ட ஏதேனும் குற்றவியல்சார் குற்றவழக்குக்கு அமைந்தவராகவிருப்பின்;

(ஆ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் நீதிமன்றத்தினால் பொறுப்புவிடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவர் ஒருவராக அல்லது வங்கி முறிந்தவர் ஒருவராக வெளிப்படுத்தப்பட்டிருப்பின்;

(இ) நிதிசார் பிறழ்முகாமைத்துவம் அல்லது ஒழுக்கக் கேட்டுக்கு உட்பட்ட தவறொன்றுக்கு ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் அல்லது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின்கீழ், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின்கீழ், 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின்கீழ் அல்லது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(உ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வையிடும் அதிகாரசபையினால், உயர்தொழில்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாயசபையினால்

அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் குழுவினால் ஒரு மோசடியான, ஏமாற்றும், நேர்மையீனச் செயல் அல்லது வேறு ஒத்த குற்றவியல் செயற்பாடு தொடர்பில் ஏதேனும் புலனாய்வு அல்லது விசாரணைக்கு உட்பட்டவராகவிருப்பின்;

(ஊ) அவ்வாறு நியமிக்கப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக் கப்படுவதற்கு முன்னரான ஏதேனும் நேரத்தில் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வையிடும் அதிகாரசபையினால், உயர்தொழில்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாயசபையினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் குழுவினால் ஒரு மோசடியான, ஏமாற்றும், நேர்மையீனச் செயல் அல்லது வேறு ஒத்த குற்றவியல் செயற்பாடு தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்டி ருப்பின்;

(எ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் வங்கியில், நிதிக் கம்பெனியில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவில் பணிப்பாளரொருவராக, பிரதான நிறைவேற்று அலுவலராக அல்லது வேறு அலுவலராக சேவையாற்றுவதிலிருந்து ஒரு ஒழுங்கு படுத்தும் அல்லது மேற்பார்வையிடும் அதிகாரசபை யினால் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருப்பின் அல்லது இடைநிறுத்தப்பட்டிருப்பின்;

(ஏ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் வங்கியினால், நிதிக் கம்பெனியினால் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் மோசடி, ஏமாற்றுதல், நேர்மையீனம் ஆகிய ஏதுக்களின்மீது அல்லது வேறு ஒத்த குற்றவியல் தவறின்மீது இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் வங்கியில், நிதிக்கம்பெனியில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவில் பணிப்பாளரொருவராக, பிரதான நிறைவேற்று அலுவலராக அல்லது வேறு அலுவலராக சேவையாற்றுவதிலிருந்து பதவியி லிருந்து நீக்கப்பட்டிருப்பின் அல்லது இடைநிறுத்தப் பட்டிருப்பின்;

(ஐ) தகுதியான நியாயாதிக்க நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவராக வெளிப்படுத்தப்பட்டிருப்பின்;

(ஒ) எந்த உரிமமளிக்கப்பட்ட வங்கியொன்றின், உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனியொன்றின், ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட குத்தகைக்கு விடும் தாபனத்தின் அல்லது ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பெனியொன்றின் உரிமம் இல்லாதாக்கப் பட்டுள்ளதோ அவற்றின் முகாமைத்துவ ஆளணி யினருள் முக்கியமான ஒருவராகவிருந்திருப்பின்;

(ஓ) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை அல்லது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பெனிகள் சட்டத்தின் கீழான ஒத்த தீர்மானத்தை மீறியுள்ளதாக மத்திய வங்கி தீர்மானித்துள்ள ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவில் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்படாத குழுவில் பணிப்பாளர் ஒருவராக, பிரதான நிறைவேற்று அலுவலராக இருந்திருப்பின் அல்லது வேறு ஏதேனும் அதிகாரத்தைக் கொண்டுள்ள பதவியை வகித்திருப்பின்;

(ஔ) விடயத்துக்கேற்ப உரிமமளிக்கப்பட்டவரின் உரிமம் அதிகாரசபையினால் இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அந்த முகாமைத்துவ ஆளணியினருள் முக்கியமான ஒருவராக, பதவி தாங்குநர் ஒருவராக, பங்காளராக இருந்திருப்பின்; அல்லது

(க) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பை அல்லது கட்டளையை திருப்திப்படுத்துவதற்கு அல்லது தனிசொன்றை மீளச் செலுத்துவதற்கு தவறியிருப்பின்.

## பாகம் VII

### உரிமமளிக்கப்பட்டவரொருவரை பரிசோதனை செய்தல்

உரிமமளிக்கப் பட்டவர்கள் ஆவணங்களை அல்லது தகவல்களை வழங்குதல் வேண்டும்

41. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, எந்தமுறையில் உரிமமளிக்கப்பட்டவரொருவரின் தொழில் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட அலுவல்கள் நடாத்தப்படுகின்றனவோ அந்த முறையை நிச்சயிப்பதற்காக அல்லது வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான முறையிலும் அத்தகைய நேரத்தினுள்ளும் அத்தகைய நோக்கத்துக்காக பெயர்குறிக்கப்பட்ட அதிகாரசபையின் எவரேனும் ஊழியருக்கு காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் படிவத்திலும் அத்தகைய கால இடைவெளிகளிலும் அல்லது அத்தகைய நேரங்களிலும் ஆவணங்களை அல்லது தகவல்களை சமர்ப்பிக்குமாறு எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரை அல்லது ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் தகவல்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற எவரேனும் உரிமமளிக்கப்பட்டவர் அல்லது ஆள், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத நிருவாக விதிப்பனவொன்றாக ஒரு பணத்தொகையைச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப் படலாம்.

(3) இப்பிரிவில் "ஆள்" என்பது, அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்தின் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் அல்லது வேறுவகையாக தாபிக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது அமைத்துருவாக்கப்பட்டதாயினுஞ்சரி கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவின் எவரேனும் அலுவலரை உள்ளடக்கும்.

உரிமமளிக்கப் பட்டவர்களைப் பரிசோதனை செய்தல்

42. (1) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரின் கணக்குப் புத்தகங்கள்

மற்றும் பதிவேடுகளை எந்நேரத்திலும் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் அந்நோக்கத்துக்காகப் பின்வருவனவற்றுள் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றைச் செய்யலாம்:-

(அ) எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரை அல்லது உரிமமளிக்கப்பட்டவரொருவரின் ஒரு பணிப்பாளரை, செயலாளரை, முகாமையாளரை, ஊழியரை, கணக்காய்வாளரை, முகவரை, ஒப்பந்தக்காரரை, பங்காளரை, பதவிதாங்குநரை அவசியமானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய எல்லாத் தகவல்களையும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஒரு முறையில் அல்லது படிவத்தில் அத்தகைய காலப்பகுதியினுள் அவருக்கு கொடுத்துதவும்படியும் அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் புத்தகங்களையும், பதிவேடுகளையும், கோப்புக்களையும், இடாப்புக்களையும் மற்றும் அச்சு அல்லது இலத்திரனியல் வடிவத்தில் பேணப்பட்ட அத்தகைய வேறு ஆவணங்களையும் பார்வையிடுவதற்காக காண்பிக்கும்படியும், அத்தகைய புத்தகங்களின், பதிவேடுகளின், கோப்புக்களின், இடாப்புக்களின் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களின் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை தேவைப்படுத்தப்பட்டவாறான ஏதேனும் படிவத்தில் வழங்கும்படியும் தேவைப்படுத்தல்;

(ஆ) அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் அல்லது அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் எவரேனும் பணிப்பாளரின், செயலாளரின், முகாமையாளரின், ஊழியரின், கணக்காய்வாளரின், முகவரின், ஒப்பந்தக்காரரின், பங்காளரின், பதவிதாங்குநரின் எவையேனும் வளவுகளினுள் அல்லது களஞ்சியப் படுத்துகை இடப்பரப்பினுள் அல்லது ஏதேனும் ஆதனத்தில் அல்லது மேலே குறித்துரைக்கப்படாத வேறு ஏதேனும் இடத்தினுள் பிரவேசித்து, வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் புத்தகங்களை, பதிவேடுகளை, கோப்புக்களை, இடாப்புக்களை மற்றும் அச்சு அல்லது இலத்திரனியல் வடிவத்தில் பேணப்பட்ட அத்தகைய வேறு

ஆவணங்களைப் பரிசோதனை செய்தல்; அத்தகைய புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புக்கள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்கள் என்பவற்றின் ஏதேனும் வடிவத்திலான மெய்யென்றுறுதிப்படுத்தப் பட்ட அல்லது வேறு வகையான பிரதிகளையும் பெறலாம்;

(இ) எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரை அல்லது எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரின் ஒரு பணிப் பாளரை, முகாமையாளரை, ஊழியரை, முகவரை, ஒப்பந்தக்காரரை, பங்காளரை, பதவிதாங்குநரை அல்லது செயலாளரை பணிப்பாளர் தலைமையதி பதியினால் அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுவதற்காக, அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் கணக்குகளைச் சமர்ப்பிக்கும்படியும், அத்தகைய தகவல்களைக் கொடுத்துதவும்படியும் அத்தகைய புத்தகங்களையும், பதிவேடுகளையும், கோப்புக்களையும், இடாப்புக் களையும் மற்றும் அச்சு அல்லது இலத்திரனியல் வடிவத்தில் பேணப்பட்ட அத்தகைய வேறு ஆவணங் களையும் காண்பிக்கும்படியும் தேவைப்படுத்துதல்;

(ஈ) எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரின் எவரேனும் பணிப்பாளரிடம், பங்குதாரரிடம், செயலாளரிடம், முகாமையாளரிடம், ஊழியரிடம், முகவரிடம், கணக்காய் வாளரிடம், பங்காளரிடம், பதவிதாங்குநரிடம் அல்லது ஒப்பந்தக்காரரிடம் அல்லது அத்தகைய உரிமமளிக் கப்பட்டவரின் தொழில் அல்லது கூட்டிணைப்பு அலுவல்கள் தொடர்பான தகவல்களுடன் பரிச்சய முள்ளவராக அல்லது அதனை அறிந்துள்ள வராக அல்லது அதனைத் தனதுடைமையில் வைத்திருப்ப வராக இருக்கக்கூடியவரான வேறெவரேனு மாளிடம் எழுத்திலான அறிவித்தல் மூலம் தகவல்களைக் கோருதல், கேள்விகள் கேட்டு கூற்றுக்களைப் பதிதல் அல்லது அவசியமாயின் தகவல்களைச் சமர்ப்பிக் கும்படி அவர்களைப் பணித்தல் அல்லது அவசிய மாயின் (17 ஆம் அத்தியாயமான) சத்தியங்களும் உறுதியுரையும் கட்டளைச் சட்டத்துக்கிணங்கச் சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதல்;

(உ) உரிமமளிக்கப்பட்டவரொருவரின் எவரேனும் தொடர்புபட்ட திறத்தவரை பணிப்பாளர் தலைமையதிபதி அவசியமெனக் கருதக்கூடியவாறான தகவல்களைக் கொடுத்துதவும்படியும் அத்தகைய தொடர்புபட்ட திறத்தவரின் புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புக்கள், இடாப்புக்கள் மற்றும் அச்சு அல்லது இலத்திரனியல் வடிவத்தில் பேணப்பட்ட அத்தகைய வேறு ஆவணங்களைப் பார்வையிடுவதற்காகக் காண்பிக்கும்படியும் அத்தகைய புத்தகங்களின், பதிவேடுகளின், கோப்புக்களின், இடாப்புக்களின் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களின் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளைத் தேவைப்படுத்தப்பட்டவாறான ஏதேனும் படிவத்தில் வழங்கும் படியும் தேவைப்படுத்தல்;

இப்பந்தியின் நோக்கங்களுக்காக "தொடர்புபட்ட திறத்தவர்" என்பது –

(i) கம்பெனியொன்றின் விடயத்தில், எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரின் ஏதேனும் துணைநிலை அல்லது இணைக் கம்பெனி அல்லது எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரின் கொளிக் கம்பெனியின் ஏதேனும் துணைநிலை அல்லது இணைக் கம்பெனி அல்லது எவரேனும் பணிப்பாளர், முக்கிய முகாமைத்துவ ஆளணியினர், செயலாளர் அல்லது அவர்களின் நெருங்கிய உறவினர்கள்;

(ii) பங்காண்மையொன்றின் விடயத்தில், பங்காளர் ஒருவர் அல்லது அத்தகைய பங்காளரின் நெருங்கிய உறவினர்கள்;

(iii) சங்கமொன்றின் விடயத்தில், பதவி தாங்குநர் ஒருவர் அல்லது அத்தகைய பதவிதாங்குநரின் நெருங்கிய உறவினர்கள்; அல்லது

(iv) பணிப்பாளர் தலைமையதிபதியின் கருத்தில் எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரிடத்தில் கணிசமானளவு நிதிசார் அக்கறையை அல்லது குறிப்பிடத்தக்க முகாமைத்துவ அக்கறையைக்

கொண்டுள்ள வேறு எவரேனும் உரிமமளிக்கப் பட்டவர் அல்லது தனியாள்,

எனப் பொருள்படும்; அல்லது

(ஊ) அத்தகைய பரிசோதனையின்போது அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் அலுவல்களின் உண்மையான நிலைமையை நிச்சயிப்பதற்கு அவசியமென அவர் கருதுகின்றவாறான வேறு ஏதேனும் நடவடிக்கையை எடுத்தல்.

(2) அதிகாரசபையானது, அவசியமெனக் கருதின், எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரின் அலுவல்களின் உண்மையான நிலைமையை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக எவரேனும் உரிமமளிக்கப்பட்டவர் மீதான பரிசோதனையொன்றைச் செய்விப்பதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணிக்கலாம்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் நியதிகளின்படி நடாத்தப்பட்ட ஒவ்வொரு பரிசோதனையும் முடிவுற்றதன்மேல், அத்தகைய பரிசோதனை பற்றி அதிகாரசபைக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, 41 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பெறப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல் களினூடாக அல்லது எத்தகையதுமான வேறு ஏதேனும் முறையில், உரிமமளிக்கப்பட்டவரொருவர் இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பு, விதி, கட்டளை அல்லது தீர்மானத்துடன் இணங்கியொழுகத்தவறியுள்ளார் என நிச்சயித்தால், அவர் அத்தகைய நிகழ்வை அதிகாரசபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(5) மூன்றாம் அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்வதன்மேல், அதிகாரசபை 39 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை எடுக்கலாம்.

இப்பாகத்தின் கீழ் விதிக்கப் படும் ஏதேனும் தேவைப்பாட் டுடன் இணங்கி யொழுகுவ தற்கான கடமை

*43.* இப்பாகத்தின்கீழ் ஒவ்வொரு ஆளுக்கும் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவது அவரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் -

(அ) இப்பாகத்தின்கீழ் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் தகவலை வழங்குவதற்கு அல்லது ஏதேனும் புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை, விடயத்தை அல்லது பொருளை சோதனைக்குக் காண்பிப்பதற்குத் தவறுகின்ற எவரேனும் ஆள்;

(ஆ) நேர்காணல் ஒன்றுக்கு அழைக்கப்படும்போது நேரடியாக வருகைதருவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள்;

(இ) பொய்யான, பூரணமற்ற அல்லது பிழையான அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்கள், புத்தகம், பதிவேடு, கோப்பு, இடாப்பு அல்லது அத்தகைய வேறு ஆவணம், விடயம் அல்லது பொருளை வழங்குகின்ற எவரேனும் ஆள்; அல்லது

(ஈ) பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது *42* ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளுக்கு முட்டுக்கட்டையிடுகின்ற எவரேனும் ஆள்,

இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

## பாகம் VIII

### வாடிக்கையாளர் பாதுகாப்பு

வங்கித் தொழில், நிதித்தொழில் அல்லது நுண்நிதித் தொழிலில் ஈடுபடுதலாகாது

*44.* உரிமமளிக்கப்பட்டவரொருவர், அவர் வங்கித்தொழிலை, நிதித்தொழிலை அல்லது நுண்நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றார் என பொதுமக்களுக்கு உட்கிடையாகக் கூறுகின்ற அல்லது ஊகமொன்றை வழங்குகின்ற சொல்லமைப்புக்களை உள்ளடக்கி அவரது தொழிலைச் சந்தைப்படுத்தும் நோக்கத்துக்காக பயன்படுத்தப்படும் ஏதேனும் விளம்பரத்தை,

சுற்றறிக்கையை அல்லது வேறு ஏதேனும் பொருளை வழங்குதலோ, வெளியிடுதலோ அல்லது எடுத்துக்காட்டுதலோ ஆகாது:

ஆயின், இப்பிரிவின் ஏற்பாடுகள், நுண்நிதி நிறுவனமொன்றின் நுண்நிதித் தொழிலை சந்தைப்படுத்தும் நோக்கத்துக்காக பயன்படுத்தப்பட்ட ஏதேனும் விளம்பரத்தை, சுற்றறிக்கையை அல்லது வேறு ஏதேனும் பொருளை வழங்குவதற்கு, வெளியிடுவதற்கு அல்லது எடுத்துக்காட்டுவதற்கு இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட அந்நுண்நிதி நிறுவனத்துக்கு ஏற்புடையனவாதலாகாது.

வாடிக்கையாளர் பாதுகாப்பு பற்றிய கொள்கையொன்றை வகுத்தமைத்தல்

45. ஒவ்வொரு உரிமமளிக்கப்பட்டவரும், விடயத்துக்கேற்ப பணிப்பாளர்கள் சபையினால், பங்காளர்களினால் அல்லது பதவிதாங்குநர்களினால் அங்கீகரிக்கப்படும் வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் சந்தை நடத்தை பற்றிய கொள்கையொன்றை வகுத்தமைத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கொள்கை உரிமமளிக்கப்பட்டவரின் எல்லா ஊழியர்களுக்கும் அறிவிக்கப் படுதலும் வேண்டும்.

உரிமமளிக் கப்பட்டவ ரொருவரின் கடப்பாடுகள்

46. உரிமமளிக்கப்பட்டவரொருவர் -

(அ) கடனொன்றை வழங்குவதற்கு முன்னர் எல்லா வாடிக்கையாளர்களுடனும் எழுத்தில் இருக்கவேண்டிய உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளல் வேண்டும்;

(ஆ) மிகையான கடன்பாட்டைத் தடுப்பதற்கென, எந்த வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் வழங்கப்படுகின்றதோ அந்த வாடிக்கையாளர்கள் அத்தகைய கடன்களை மீளச்செலுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டிருக்கின்றார்கள் என உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(இ) உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளும் நேரத்தில், விதிக்கப்படும் பெயரளவிலான வட்டி வீதம் மற்றும் வருடாந்த பயனுறுவட்டி வீதத்தைக் குறித்துரைத்தல் வேண்டும்;

(ஈ) அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான கட்டணமொன்றுக்கு அமைய, எவரேனும் வாடிக்கையாளரின் கோரிக்கையின்பேரில் கடன் கூற்றொன்றை அல்லது கணக்கு நிலைமையை அவருக்கு வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(உ) கடன் தவணைப் பணங்களின் வழமையான சேகரிப்பு மற்றும் கடன்களின் அறவிடுகையை நிறைவேற்றுவதில் அவரது வாடிக்கையாளர்கள்மீது ஏதேனும் தொந்தரவு, அச்சுறுத்தல், மிரட்டல் அல்லது அவமானத்தைப் பிரயோகிக்காமல் அத்தகைய வாடிக்கையாளர்களை நியாயமாகவும் மதிப்புடனும் கையாளுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

பராயமடையாதவொருவருடன் உடன்படிக்கையெதுவும் செய்து கொள்ளப்படுதலாகாது

*47*. உரிமமளிக்கப்பட்டவரொருவர் பராயமடையும் வயதை அடைந்திராத ஆளொருவருக்கு கடனொன்றை அல்லது வேறு ஏதேனும் நிதிசார் சேவையை வழங்குவதற்கான ஏதேனும் உடன்படிக்கையைச் செய்துகொள்ளல் ஆகாது.

கடன் உடன்படிக்கை

*48*. (1) உரிமமளிக்கப்பட்டவரொருவரினால் கடனொன்றை அல்லது வேறு ஏதேனும் நிதிசார் சேவையை வழங்குவதற்கு அவரது வாடிக்கையாளருடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை –

(அ) சுருக்கமாகவும், புரிந்துகொள்வதற்கு இலகுவானதாகவும் செம்மையானதாகவும் இருத்தல் வேண்டும்;

(ஆ) வாடிக்கையாளருக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் அவர் விரும்பிய மொழியில் கிடைக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும்;

(இ) நியாயமற்றதாகவுள்ள, பிறழ்பிரதிநிதித்துவப்படுத்தப் படுகின்ற, அத்தகைய உரிமமளிக்கப் பட்டவரின் பொறுப்பை தவிர்க்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற வாடிக்கையாளரின் ஏதேனும் உரிமையை தவிர்க்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பின் அல்லது விதியின் அல்லது

அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்புடைமையைத் தடுக்கின்ற எவையேனும் நியதி நிபந்தனைகளை உள்ளடக்குதல் ஆகாது;

(ஈ) எந்த நியதி நிபந்தனைகளுக்கமைய வாடிக்கையாளருக்கு பணம் கடனாக வழங்கப்படுகின்றதோ அல்லது வேறு ஏதேனும் நிதிசார் சேவை வழங்கப்படுகின்றதோ அந்த எல்லா நியதி நிபந்தனைகளையும் உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நிபந்தனைகளுக்குச் செய்யப்பட்ட ஏதேனும் திருத்தம், திரிபு, வாடிக்கை யாளருக்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டு அத்தகைய வாடிக்கையாளர் அதற்கு எழுத்தில் உடன்பட்டாலொழிய அத்தகைய திருத்தம் அல்லது திரிபு சட்ட நீதிமன்ற மொன்றின் முன்னர் வலுவுறுத்தப்படற்பாலதாதலும் ஆகாது; அத்துடன்

(உ) உடன்படிக்கையை செய்துகொள்வதற்கு முன்னர் அதன் உள்ளீடுகள் மற்றும் நிதிசார் சிக்கல்கள் பற்றி உரிமமளிக்கப்பட்டவரினால் வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் விரும்பியமொழியில் விளங்கப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய கடனைப்பெறுவதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் விதியை, பணிப்பை, தீர்மானத்தை மீறி செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் கடன் உடன்படிக்கை அல்லது ஏதேனும் உத்தரவாதம் அல்லது பிணைப்பொறுப்பு வெற்றும் வறிதானதுமாதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் சட்ட நீதிமன்றத்தின் முன்னர் வலுவுறுத்தப்படற்பாலதாதலுமாகாது.

உரிமமளிக்கப் பட்டவரினால் தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள்

49. உரிமமளிக்கப்பட்டவரொருவர் -

(அ) வெற்று, பூரணமற்ற அல்லது மாற்றப்பட்ட கடன் உடன்படிக்கை, வேறு எவையேனும் நிதிசார் சேவைகளை வழங்குவதற்கான ஒரு உடன்படிக்கை அல்லது வேறு பிணைப்பொறுப்பு ஆவணத்துக்கு எவரேனும் ஆளின் சம்மதத்தை அல்லது கையொப் பத்தைப் பெறுதல் ஆகாது;

(ஆ) கடனாகக் கொடுக்கப்பட்ட பிரதான தொகைக்கு விஞ்சுதலாக வட்டியாகவுள்ள மொத்தத்தொகையை எந்நேரத்திலும் அறவிடுதலாகாது;

(இ) எவரேனும் வாடிக்கையாளருக்கு ஏதேனும் பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது ஏமாற்றும் தன்மையின தாகவுள்ள கூற்றைச் செய்தலாகாது அல்லது வாடிக்கை யாளரிடமிருந்து ஏதேனும் முக்கிய நிகழ்வை மறைத்தலாகாது;

(ஈ) கடன் உடன்படிக்கையொன்றை அல்லது நிதிசார் சேவைகளை வழங்குவதற்கான வேறு ஏதேனும் உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கு அல்லது ஏதேனும் நியதி அல்லது நிபந்தனையுடன் உடன்படுவதற்கு மோசடியாகத் தூண்டுதலோ அல்லது தூண்டுவதற்கு எத்தனித்தலோ ஆகாது;

(உ) சமயம், பால் அல்லது அதனோடு தொடர்புபட்ட வேறு ஏதேனும் முக்கியமான காரணியை அடிப்படையாகக் கொண்டு சனத்தொகையின் எவரேனும் பிரிவினரை ஓரங்கட்டுதல் ஆகாது;

(ஊ) எவரேனும் ஆளுக்கு பணம் கடனாக வழங்குவதில் அல்லது அத்தகைய ஆளிடமிருந்து அத்தகைய ஏதேனும் பணத்தை அறவிடும்போது தகாத செல்வாக்கைப் பிரயோகித்தல் ஆகாது; அல்லது

(எ) கடன்களை அறவிடும் போதும் வேறு எவையேனும் நிதிசார் சேவைகளை வழங்கும் போதும் ஏதேனும் முறையில் வாடிக்கையாளர்களுக்கு தொந்தரவு செய்தலாகாது.

*கடன் ஆலோசனை யளிக்கும் நிலையங்கள்*

50. அதிகாரசபையானது அதன் கிளைகளுள் எவற்றிலும் மற்றும் அதிகாரசபை அவசியமென கருதுகின்றவாறான வேறு ஏதேனும் இடத்திலும் கடன் ஆலோசனையளிக்கும் நிலையங்களைத் தாபிக்கலாம்.

அதிகார சபைக்குச் செய்யப்பட்ட வாடிக்கை யாளரின் முறைப்பாடு களைக் கையாளுதல்

51. (1) அதிகாரசபையானது, உரிமமளிக்கப்பட்டவரொருவரினால் இன்னலுற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகளைக் கையாளுவதற்கு (இதனகத்துப்பின்னர் "விசாரணை செய்யும் அலுவலர்கள்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) அலுவலர் ஒருவரை அல்லது அலுவலர்களை நியமித்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, அதிகாரசபையானது பின்வருவனவற்றிற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) உரிமமளிக்கப்பட்டவரை, முறைப்பாட்டாளரை மற்றும் வேறு எவரேனும் ஆளை விசாரணைசெய்து அது அவசியமென கருதுகின்றவாறான தகவல்களை சமர்ப்பிக்குமாறு கோருதல்;

(ஆ) இச்சட்டத்தின் பாகம் VII இன் கீழ் பரிசோதனைகளை நடாத்துதல்; அல்லது

(இ) விசாரணை அல்லது புலனாய்வொன்றுக்காக உரிமமளிக்கப்பட்டவரை அல்லது முறைப்பாட்டாளரை அல்லது அத்தகைய உரிமமளிக்கப்பட்டவர், முறைப்பாட்டாளர் ஆகிய இருவரையும் அழைத்தல்.

(3) இரண்டாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, அதிகாரசபையினால் அழைக்கப்படுகின்ற எவரேனும் திறத்தவர் சார்பாக பிரதிநிதித்துவம் ஒன்றைச் செய்வதற்கு சட்டத்தரணியொருவர் உரித்துடையவராதலோ அல்லது அனுமதிக்கப்படுதலோ ஆகாது.

(4) அதிகாரசபையானது, (2) ஆம் உட்பிரிவின்கீழ் விசாரணைகளை நடாத்துவதற்காக விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான தோதான நடவடிக்கைமுறையொன்றைப் பின்பற்றலாம்.

(5) விசாரணைசெய்யும் அலுவலர், திறத்தவர்களை சுமுகமான தீர்வொன்றுக்கு கொண்டுவருவதற்கு முயற்சித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்வதற்கு தவறுகின்ற பட்சத்தில், பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரசபைக்கு அத்தகைய திறத்தவர்களினால் செய்யப்பட்ட முறையீடுகளையும் விசாரணை

செய்யும் அலுவலரின் விதப்புரையையும் அவரது அபிப் பிராயத்தில் விசாரணைக்குட்படவேண்டிய அத்தகைய வேறு கருமங்களையும் கவனத்துட்கொண்டு-

(அ) 39 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம்;

(ஆ) விடயத்துக்கேற்ப, உரிமமளிக்கப்பட்டவருக்கு அல்லது வாடிக்கையாளருக்கு அல்லது அத்தகைய உரிமமளிக்கப் பட்டவர், வாடிக்கையாளர் ஆகிய இருவருக்கும் பணிப்புக்களை வழங்கலாம்; அல்லது

(இ) மேலேயுள்ள பந்தி (அ) மற்றும் (ஆ) என்பவற்றின் கீழ் நடவடிக்கை இரண்டையும் எடுக்கலாம்.

(6) அதிகாரசபையானது, வாடிக்கையாளர்களினால் அல்லது உரிமமளிக்கப்பட்டவர்களினால் பெறப்பட்ட முறைப்பாடுகளின் தரவுத்தளமொன்றைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் பணக் கடன் வழங்குதொழில் மற்றும் நுண்நிதித் தொழிலில் நடைமுறையில் உள்ளனவும் உருவாகிவருகின்றனவுமான பிரச்சினைகள், அத்தகைய பிரச்சினைகளின் வடிவங்கள், அதே பிரச்சினைகள் மீண்டும் நிகழ்தல் மற்றும் அதிகாரசபை அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய வேறு ஒத்த கரிசனைகளை அடையாளம் காணுவதற்கு அத்தகைய முறைப்பாடுகளை பகுப்பாய்வும் செய்யலாம்.

வாடிக்கையாளரின் உரிய விழிப்புக் கவனத் தேவைப்பாடுகள்

52. (1) ஒவ்வொரு உரிமமளிக்கப்பட்டவரும் தனது தொழிலை நிறைவேற்றுவதில் அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் விதிக்கப்பட்டவாறு வாடிக்கை யாளரின் உரிய விழிப்புக்கவனத் தேவைப்பாடுகளின் எல்லா அம்சங்களும் இணங்கியொழுகப்படுகின்றன என உறுதிப் படுத்துவது அவரது கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அவற்றின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, பணிப்பு, விதி, தீர்மானம், வழிகாட்டுநெறி அல்லது சுற்றறிக்கை அத்தகைய எல்லா உரிமமளிக்கப்பட்டவர்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

வாடிக்கையாளர்களின் பொறுப்புக்கள்

53. வாடிக்கையாளர் ஒருவர் -

(அ) உரிமமளிக்கப்பட்டவரொருவருடனான ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலிலும் நியாயமான உரிய கவனத்தைப் பிரயோகித்தல் வேண்டும்;

(ஆ) அவரது கணக்குக்கு அல்லது செயலிடத்துக்குச் செய்யப்பட்ட பொய்யான புனைதல்கள் அல்லது அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களை, அவற்றை அறியவந்தவுடனேயே உரிமமளிக்கப்பட்டவருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்;

(இ) கடனின் நோக்கத்தை அடையாளம் காணுவதற்கான நியாயமான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் தவறுகையின்றி திருப்பிக் கொடுக்கமுடியுமான அத்தகைய நோக்கத்திற்குப் பயன்படுத்துவதற்கு கடனொன்றாக பணத்தொகையொன்றைப் பெறுதலும் வேண்டும்.

(ஈ) ஏதேனும் கடனை வழங்குவதற்கு அல்லது தகாத தாமதமின்றி அத்தகைய கடனுக்கு எதிரான பிணைப்பொறுப்பொன்றை ஏற்றுக்கொள்வதற்கு உரிமமளிக்கப்பட்டவரொருவருக்கு அவசியமான எல்லாத் தகவல்களையும் வழங்குதல் வேண்டும்;

(உ) பெறப்பட்ட ஏதேனும் கடனின் உரிய கொடுப்பனவை தடங்கல்செய்யக்கூடிய ஏதேனும் நிதிசார் சிரமம் பற்றி சாத்தியமானளவு விரைவாக உரிமமளிக்கப்பட்டவருக்கு அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

(ஊ) ஏதேனும் கடன் திருப்பிக்கொடுக்கும் காலத்தின்போது அவரது தொடர்பு விபரங்களுக்கு செய்யப்பட்ட எவையேனும் மாற்றங்கள் பற்றி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உரிமமளிக்கப்பட்டவருக்கு அறிவித்தல் வேண்டும்.

## பாகம் IX

### தவறுகளைப் புலனாய்வு செய்தல்

*பரிசோதனை செய்வதற்கான தத்துவங்களுக்கு மேலதிகமாக புலனாய்வுக்கான தத்துவங்கள்*

54. இப்பாகத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் பாகம் VII இன்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களுக்கு மேலதிகமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரை பரிசோதனை யிடுவதற்கு சொல்லப்பட்ட பாகம் VII இன் கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களை மட்டுப்படுத்தும் வகையில் பொருளமைத்துக்கொள்ளப்படுதலாகாது.

*தவறுகளைப் புலனாய்வு செய்தல்*

55. (1) இருபத்தோராம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிவதுடன் தொடர்பான ஆளொருவர் சம்பந்தமாக ஏதேனும் முறைப்பாட்டை அல்லது தகவலை அதிகாரசபை பெறுகின்றவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அவரினால் பெறப்பட்ட ஏதேனும் முறைப்பாட்டின் அல்லது தகவலின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள அலுவலரொருவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய முறைப்பாடு அல்லது தகவலின்மீது புலனாய்வொன்றை நடாத்துமாறு அத்தகைய அலுவலரைக் கோருதலும் வேண்டும். பணிப்பாளர் தலைமைய திபதியினால் கோரப்பட்டவாறு அத்தகைய தவறு புரியப்பட்டமை பற்றி புலனாய்வொன்றை நடாத்துவது அல்லது புலனாய்வொன்று நடாத்தப்படுவதனைச் செய்விப்பது அத்தகைய பொலிசு அலுவலரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் இச் சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட புலனாய்வின் எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழான தவறொன்று தொடர்பாக ஏதேனும் செயற்பாட்டுடன் சம்பந்தப்படுகின்றார் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை பொலிசு அலுவலர் ஒருவர் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய அலுவலர், தவறின் அத்தகைய புரிகை பற்றி புலனாய்வொன்றைச் செய்யலாம் அல்லது புலனாய்வொன்று நடாத்தப்படுவதனைச் செய்விக்கலாம் என்பதுடன் இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட புலனாய்வின் எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிக்கலாம்.

தகவலைப் பெற்றுக்கொள் வதற்கான நீதிமன்றக் கட்டளை

56. எவரேனும் ஆள், 55 ஆம் பிரிவின்கீழ் புலனாய்வொன்றை நடாத்தும் பொலிசு அலுவலரொருவரினால் தேவைப்படுத்தப்படும்போது ஏதேனும் தகவலை, புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை அல்லது பொருளை அல்லது பருப்பொருளை வழங்குவதற்கு தவறுகின்றவிடத்து அல்லது பொய்யான, பிழையான அல்லது பூரணமற்ற தகவலை, புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை அல்லது பொருளை அல்லது பருப்பொருளை வழங்குகின்றவிடத்து, உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள பொலிசு அலுவலர் ஒருவர் -

(அ) 55 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கு தவறியுள்ள ஆளின் அச்சு, இலத்திரனியல் அல்லது வேறு ஏதேனும் வடிவத்தில் பேணப்பட்ட ஏதேனும் புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களை, பொருளை அல்லது பருப்பொருளை சோதனையிடுவதற்கு விண்ணப்பத்தில் பெயர்குறிப்பிடப்பட்ட எவரேனும் ஆளுக்கு அதிகாரமளித்து; அல்லது

(ஆ) 55 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின் படி செய்யப்பட்ட தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கு தவறியுள்ள ஆளை அல்லது கட்டளையொன்றில் பெயர்குறிப்பிடப்படக்கூடியவாறான அத்தகைய ஆளின் பணிப்பாளர் ஒருவரை, பங்காளரை, உறுப்பினரை,

செயலாளரை, முகாமையாளரை, ஊழியரை, முகவரை, ஒப்பந்தக்காரரை அல்லது கணக்காய்வாளரை, அத்தகைய ஆளின் அச்சு, இலத்திரனியல் அல்லது வேறு ஏதேனும் வடிவத்தில் பேணப்பட்ட ஏதேனும் புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை மற்றும் அத்தகைய வேறு ஆவணத்தை, பொருளை அல்லது பருப்பொருளை அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஆளொருவருக்கும் இடமொன்றிலும் காண்பிக்குமாறு தேவைப்படுத்தி,

அக்கட்டளையை வழங்குவதற்காக நீதிவான் ஒருவருக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

புலனாய்வு செய்யப்படும் ஆட்களின் கடவுச் சீட்டுக்களை பற்றிவைத்தல்

57. (1) உதவிப்பொலிசுக் கண்காணிப்பாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையில் உள்ள பொலிசு அலுவலர் ஒருவர், 55 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி புலனாய்வு செய்யப்பட்ட ஆளொருவரின் கடவுச்சீட்டை பற்றிவைக்கும்படி நீதிவான் ஒருவருக்கு விண்ணப்பமொன்றை எந்நேரத்திலும் செய்யலாம்.

(2) ஐம்பத்தைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி புலனாய்வுசெய்யப்பட்ட ஆள், ஆட்கள் குழுவொன்றாகவிருக்கின்ற பட்சத்தில் -

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக விருப்பின் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவரேனும் பங்குதாரரின், பணிப்பாளரின், முகாமையாளரின் அல்லது அலுவலரின் கடவுச்சீட்டை; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு பங்காண்மையொன்றாகவிருப்பின், அத்தகைய பங்காண்மையின் எவரேனும் பங்காளரின் கடவுச்சீட்டை; அல்லது

(இ) அவ்வாட்கள் குழு, ஒரு பங்காண்மை தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய குழுவின் எவரேனும் உறுப்பினரின் அல்லது அதன் முகாமை மற்றும் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பாகவுள்ள அக்குழுவின் எவரேனும் அலுவலரின் கடவுச்சீட்டை,

பற்றிவைப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான விண்ணப்பமொன்றை அல்லது விண்ணப்பங்களைச் செய்வது உதவி பொலிசுக் கண்காணிப்பாளர் ஒருவரின் பதவி வரிசைக்குக்குறையாத பதவி வரிசையில் உள்ள பொலிசு அலுவலர் ஒருவருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

*தவறுகளை இணக்குதல்*

58. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரசபையின் அங்கீகாரத்துடனும் எந்தச் சூழ்நிலைகளில் இச்சட்டத்தின் கீழான தவறொன்று புரியப்பட்டதோ அந்தச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டும் ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றிற்கு அத்தகைய தவறை இணக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் தவறை இணக்குதல் குற்றவாளியை விடுதலை செய்யும் பயனைக் கொண்டதாக விருத்தல் வேண்டும்.

## பாகம் X

## தவறுகளும் தண்டங்களும்

*ஊழியர்களினாலான தவறுகள்*

59. உரிமமளிக்கப்பட்டவரொருவரின் பணிப்பாளரொருவராக, செயலாளராக, பிரதான நிறைவேற்று அலுவலராக, முகாமையாளராக, அலுவலராக, ஊழியராக, பங்காளராக, பதவிதாங்குநராக அல்லது கணக்காய்வாளராக இருந்துகொண்டு-

(அ) உரிமமளிக்கப்பட்டவர் இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்றார் என உறுதிப்படுத்துவதற்கான எல்லா நியாயமான நடவடிக்கைகளையும் எடுப்பதற்குத் தவறுகின்ற எவரேனும் ஆள்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் அல்லது ஆக்கப்பட்ட விதியுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள்;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள்;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரினால் சமர்ப்பிக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட ஏதேனும் கூற்றின் செம்மையை உறுதிப்படுத்துவதற்கான எல்லா நியாயமான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள்;

(உ) அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் தொழில் அலுவல்கள், கொடுக்கல்வாங்கல்கள், நிலைமைகள், சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அல்லது கணக்குகள் தொடர்பாக ஏதேனும் புத்தகத்தில், பதிவேட்டில், கோப்பில், இடாப்பில் அல்லது அத்தகைய வேறு ஆவணத்தில் அல்லது கூற்றில் பொய்யான பதிவீடொன்றைச் செய்கின்ற அல்லது அத்தகைய பதிவீடு செய்யப்படுவதனைச் செய்விக்கின்ற எவரேனும் ஆள்;

(ஊ) அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் தொழில் அலுவல்கள், கொடுக்கல்வாங்கல்கள், நிலைமைகள், சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அல்லது கணக்குகள் தொடர்பாக ஏதேனும் புத்தகத்தில், பதிவேட்டில், கோப்பில், இடாப்பில் அல்லது அத்தகைய வேறு ஆவணத்தில் அல்லது கூற்றில் பதிவீடொன்றைச் செய்யாதுவிடுகின்ற அல்லது அத்தகைய பதிவீட்டைச் செய்யாதுவிடுவதனைச் செய்விக்கின்ற எவரேனும் ஆள்;

(எ) அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் தொழில் அலுவல்கள், கொடுக்கல்வாங்கல்கள், நிலைமைகள், சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அல்லது கணக்குகள் தொடர்பான ஏதேனும் புத்தகத்தில், பதிவேட்டில், கோப்பில், இடாப்பில் அல்லது அத்தகைய வேறு ஆவணத்தில் அல்லது கூற்றில் ஏதேனும் பதிவீட்டை மாற்றுகின்ற, சுருக்குகின்ற, மறைத்து வைக்கின்ற, அழிக்கின்ற அல்லது அழித்துவிடுகின்ற அல்லது அத்தகைய ஏதேனும் பதிவீடு மாற்றப் படுவதனை, சுருக்கப்படுவதனை, மறைத்துவைக்கப் படுவதனை, அழிக்கப்படுவதனை அல்லது அழித்துவிடப்படுவதனைச் செய்விக்கின்ற எவரேனும் ஆள்; அல்லது

(ஏ) அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் உண்மையான நிலைமையை மறைத்துவைக்கும் நோக்கத்துக்காக பல தொகுதிப் புத்தகங்களை, பதிவேடுகளை, கோப்புகளை, இடாப்புகளை அல்லது அத்தகைய வேறு ஆவணங்களைப் பேணுகின்ற எவரேனும் ஆள்,

இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

சட்டத்தை மீறுவதற்கான தண்டம்

60. (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை, வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் விதியை, பணிப்பை, கட்டளையை அல்லது தேவைப்பாட்டை மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அதன்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் நிருவாக விதிப்பனவைச் செலுத்துவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் அத்தவறுக்கு இச்சட்டத்தில் வேறு தண்டனையெதுவும் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்படாத விடத்து, நீதிவானொருவரினாலான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுகின்றவிடத்து, அப்போது —

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக விருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும், அலுவலரும் அல்லது செயலாளரும்;

(ஆ) அவ்வாட்கள் குழு பங்காண்மையொன்றாகவிருப்பின், அத்தகைய பங்காண்மையின் ஒவ்வொரு பங்காளரும்; அல்லது

(இ) அவ்வாட்கள் குழு பங்காண்மையொன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும்,

அத்தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவர், முகாமையாளர், அலுவலர் அல்லது செயலாளர் அல்லது அத்தகைய பங்காண்மையின் பங்காளர் ஒருவர் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றின் அலுவலர் ஒருவர், அத்தகைய தவறு அவரை அறியாமல் புரியப்பட்டது என அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கான உரிய விழிப்புக்கவனத்தை அவர் பிரயோகித்தார் என அவர் எண்பித்தால் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் ஆகாது.

(3) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு உடந்தையளிக்கின்ற, சதிசெய்கின்ற அல்லது எத்தனிக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் இச்சட்டத்தின் கீழான நிலையான தவறுக்கு தண்டிக்கப்படற் பாலதான அதே முறையில் தண்டிக்கப்படற்பாலதாதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் நீதிவான் ஒருவரினால் குற்றப் பணமொன்றைச் செலுத்துவதற்கு கட்டளையிடப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் பணிப்பாளர் ஒருவர், முகாமையாளர் அல்லது செயலாளர் அல்லது பங்காண்மை யொன்றின் பங்காளர் ஒருவர் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றின் உறுப்பினர் ஒருவர் அத்தகைய குற்றப்பணத்தின் அல்லது அதன் பாகத்தின் கொடுப்பனவுக்காக விடயத்துக்கேற்ப அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின், பங்காண்மையின் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவின் எவையேனும் நிதிகளைப் பயன்படுத்தினால் அவர் தவறொன்றைப் புரிகின்றார்.

## பாகம் XI

### நிதி

அதிகார சபையின் நிதியம்

61. (1) அதிகாரசபையானது (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றமானது, அதிகாரசபையின் ஆரம்ப மூலதனமாக திரட்டு நிதியத்திலிருந்து அமைச்சரினால் முடிவு செய்யப்படவேண்டிய நூறு மில்லியன் ரூபா பணத்தொகை

யொன்றை குறித்தொதுக்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தொகை, இதன் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) பின்வருவன நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்-

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்காக பாராளு மன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகை களும்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே எத்தகையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து வருமானம், கட்டணங்கள், விதிப்பனவுகள், மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் என்ற வகையாக அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(4) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் -

(அ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்கு தேவைப்படுத் தப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்.

(5) அதிகாரசபையானது, நிதியத்திலிருந்து பணக்கொடுப்பனவு செய்தல் சம்பந்தமாக விதிகளை ஆக்குதல் வேண்டும்.

(6) உடனடியாக அடுத்துவரும் நிதியாண்டுக்காக அதிகாரசபையின் அதிகரிக்கப்பட்ட மூலதனத்தேவைப்பாட்டுக்காக தேவைப்படுத்தப்பட்ட தொகையொன்றை அமைச்சரின் அங்கீகாரத்துடன் வைத்திருந்ததன் பின்னர், ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் அதிகாரசபையின் தேறிய இலாபம் திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

*நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்*

62. (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, அதிகாரசபையின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறெல்லா கொடுக்கல்வாங்கல்களின் முறையான கணக்குகள் பற்றிய புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) அதிகாரசபையானது, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றை கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து, அத்தகைய அறிக்கை எந்த நிதியாண்டுடன் தொடர்புறுகின்றதோ அந்த நிதியாண்டின் முடிவிலிருந்து ஐந்து மாதங்களினுள் அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சர் அத்தகைய கூற்றையும் அறிக்கையையும் பெற்றதிலிருந்து இரண்டு மாதங்களினுள் அவற்றைப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

*1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்புடைமை*

63. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள், அதிகாரசபையின் நிதிசார் கட்டுப்பாடு மற்றும் கணக்குகளுக்கும் அவை தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் XII

### பொது

கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய இரகசியம்

*64. (1)* எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரினதும் 42 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினதும் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும், அலுவலரும், ஊழியரும் மற்றும் முகவரும், அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின், அவரது வாடிக்கையாளர்களின் எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் எவரேனும் ஆளின் கணக்குகளின் நிலைமை தொடர்பிலும் மற்றும் அவை தொடர்பிலான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கண்டிப்பான இரகசியத் தன்மையைக் கடைபிடித்தல் வேண்டுமென்பதுடன் பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர அத்தகைய ஏதேனும் கருமத்தை வெளிவிடுதலும் ஆகாது —

(அ) (i) சட்ட நீதிமன்றமொன்றினால்;

(ii) அத்தகைய கருமம் எந்த ஆளுடன் தொடர்புறுகின்றதோ அந்த ஆளினால்,

அவ்வாறு செய்வதற்கு தேவைப்படுத்தப்படும் போது;

(ஆ) அத்தகைய பணிப்பாளர், முகாமையாளர், அலுவலர், ஊழியர் மற்றும் முகவரின் கடமைகளைப் புரிகையில்; அல்லது

(இ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுடனும் இணங்கியொழுகுவதற்கெனவும்.

(2) ஒராம் உட்பிரிவுக்கமைய, உரிமமளிக்கப்பட்டவரொருவர் அவரது வாடிக்கையாளர்களின் அந்தரங்கத்தன்மையை பயனுள்ளவகையில் பாதுகாக்கின்ற முறையொன்றில் வாடிக்கையாளர் தரவை சேகரித்தலும், தேக்கிவைத்தலும், பார்வையிடுதலும் மற்றும் பயன்படுத்துதலும் வேண்டும்.

தகவல்களின் இரகசியத் தன்மை

*65.* அதிகாரசபையின் ஒவ்வொரு உறுப்பினரும், அலுவலரும் மற்றும் ஊழியரும், இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரிவதில் தவிர, இச்சட்டத்தின் கீழ் அல்லது அப்போதைக்கு

வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரிவதில் அவரது அறிவுக்கு வரக்கூடிய எல்லாக் கருமங்கள் தொர்பிலும் -

(அ) இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்றைச் செய்துள்ள எவரேனும் விண்ணப்பதாரரின்;

(ஆ) உரிமமளிக்கப்பட்டவரொருவரின் அல்லது அத்தகைய உரிமமளிக்கப்பட்டவரின் எவரேனும் வாடிக்கையாளரின்; அல்லது

(இ) ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின்,

அலுவல்கள் தொடர்பிலான எவையேனும் தகவல்கள் பற்றியும் இரகசியத்தைப் பேணிக்காத்தல் வேண்டும் என்பதுடன் இரகசியத்தைப் பேணிக்காப்பதில் உதவுதலும் வேண்டும் அத்துடன் -

(i) அதிகாரசபை, பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகார சபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரசபையின் அலுவலரொருவர் தவிர்ந்த எவரேனும் ஆளுக்கு அத்தகைய ஏதேனும் கருமத்தை அல்லது தகவலை அறிவிக்கின்ற; அல்லது

(ii) விடயத்துக்கேற்ப இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்றுக்கான எவரேனும் விண்ணப்பதாரர், உரிமமளிக்கப்பட்டவர், உரிமமளிக்கப்பட்டவரொருவரின் எவரேனும் வாடிக்கையாளர் அல்லது ஏதேனும் அரசாங்க நிறுவனம் தொடர்பாக எவரேனும் அதிகாரமளிக்கப்படாத ஆள் எவையேனும் புத்தகங்களை, பத்திரங்களை அல்லது வேறு பதிவேடுகளை அணுகுவதை அனுமதியளிக்கின்ற அல்லது அனுமதிக்கின்ற,

அத்தகைய எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியர் தவறொன்றைப் புரிகின்றார்.

*அஞ்சலிலிடுதல் முறையான அறிவிப்பாகக் கருதப்படுதல் வேண்டும்*

66. ஏதேனும் அறிவித்தல் இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப் பட்டவரொருவருக்கு சேர்ப்பிக்கப்படுகின்றவிடத்து அல்லது அதிகாரசபை இச்சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையை உரிமமளிக்கப்பட்டவரொரு வருக்கு அறிவிக்கின்றவிடத்து, பிரதான அலுவலருக்கு முகவரி யிடப்பட்டு உரிமமளிக்கப்பட்டவரொருவரின் பிரதான தொழில் இடத்தின் முகவரிக்கு அத்தகைய அறிவித்தல் அல்லது தகவலை அஞ்சலிலிடுதல் பற்றிய எண்பிப்பு, அத்தகைய அறிவித்தல் அத்தகைய உரிமமளிக்கப்பட்டவர்மீது சேர்ப்பிக்கப் பட்டுள்ளது என எண்பிப்பதற்குப் போதியதாகவிருத்தல் வேண்டும்.

*மத்திய வங்கி அதிகார சபைக்கு வழிகாட்டு நெறிகளை வழங்குதல் வேண்டும்*

67. (1) இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியானது, நிதிசார் முறைமையின் நிலையுறுதியை பலப்படுத்துவதற்கெனவும் உரிமமளிக்கப்பட்டவரொருவரை ஒழுங்குபடுத்துவதிலும் மற்றும் மேற்பார்வை செய்வதிலும் பண்படிப்படையிலான சீராக்கங்களைச் செய்வதற்கெனவும் அதிகாரசபைக்கு வழிகாட்டுநெறிகளை வழங்கலாம் என்பதுடன் அதிகாரசபையானது தோதான விதிகளை ஆக்குவதன் மூலம் அல்லது பணிப்புகளை வழங்குவதன் மூலம் அல்லது வேறு ஏதேனும் தோதான நடவடிக்கையை எடுப்பதன்மூலம் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அத்தகைய வழிகாட்டு நெறிகளுக்கு பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது, காலத்துக்குக் காலம் அதிகார சபையிடம் தகவல்களைக் கோரலாம் என்பதுடன் அத்தகைய தகவல்களை உரிய நேரத்திலான முறையில் சமர்ப்பிப்பது அதிகாரசபையின் கடமையாதலும் வேண்டும்.

*உரிமமளிக் கப்பட்டவர்கள் பற்றிய இடாப்பு*

68. (1) அதிகாரசபையானது, வழங்கப்பட்ட உரிமங்கள் பற்றிய விபரங்கள், ஒவ்வொரு உரிமத்தின்மீது விதிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தேவைப்பாடுகள் மற்றும் அதிகாரசபை தோதானதென கருதுகின்றவாறான வேறு ஏதேனும் தகவல் பதிவுசெய்யப்படவேண்டிய உரிமமளிக்கப்பட்டவர்களுக்கான தனிவேறான இடாப்புக்களைப் பேணுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, உரிமம் வழங்குகின்றமைக்கான அடிப்படை, ஒவ்வொரு உரிமத்தையும் வழங்குவதில் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தேவைப்பாடுகள் மற்றும் உரிமமொன்று மறுக்கப்படுகின்றவிடத்து அத்தகைய மறுப்புக்கான காரணங்கள் பற்றிய பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

*உரிமமளிக்கப் பட்டவர்களின் நிரல் வெளியிடப் படுதல் வேண்டும்*

69. அதிகாரசபையானது, காலத்துக்குக்காலம், இச்சட்டத்தின் கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள உரிமமளிக்கப்பட்டவர்களின் நிரலொன்றை வழங்கி இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது ஒரு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்த செய்தித்தாளில் அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

*அடகு பிடிப்போர் கட்டளைச் சட்டம் உரிமமளிக்கப் பட்டவரொரு வருக்கு ஏற்புடைய தாதலாகாது*

70. (90 ஆம் அத்தியாயமான) அடகுபிடிப்போர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவரேனும் உரிமமளிக்கப்பட்டவருக்கு ஏற்புடையனவாதலாகாது என்பதுடன் அத்தகைய உரிமமளிக்கப் பட்டவர் அந்நோக்கத்துக்காக அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அத்தகைய பணிப்புகளுக்கமைய அடகு பிடிப்பவர் ஒருவரின் தொழிலைக் கொண்டுநடாத்தலாம்.

*வியாபாரப் பெயர்களில் "கடன்", "நுண்கடன்", "கடன் வழங்கல்", "கடன் வழங்குநர்கள்", "பணக் கடன் வழங்குநர்கள்" மற்றும் "நுண்நிதி" என்னும் சொற்களைப் பயன்படுத்துதல்*

71. (1) உரிமமளிக்கப்பட்ட பணக்கடன் வழங்குநர் ஒருவர் அல்லது 20 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் விலக்களிக்கப்பட்ட ஒரு நிறுவனம் தவிர்ந்த ஆளெவரும், அதிகாரசபையின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, தனியாகவாயினுஞ்சரி அல்லது வேறு ஏதேனும் சொல்லுடன் இணைந்ததாகவாயினுஞ்சரி அவரது அல்லது அதன் பெயரின் அல்லது அவரது அல்லது அதன் விவரணத்தின் பாகமொன்றாக "கடன்", "நுண்கடன்", "கடன் வழங்கல்", "கடன் வழங்குநர்கள்", "பணக் கடன் வழங்குநர்கள்" ஆகிய சொற்களுள் எவற்றையும் அல்லது நுண்நிதி அல்லது அவற்றின் வழிவந்தவைகளுள் அல்லது எழுத்துப் பெயர்ப்புகள் அல்லது வேறு ஏதேனும் மொழியில் அவற்றுக்குச் சமமானவற்றுள் எவற்றையும் பயன்படுத்துதல் ஆகாது.

(2) ஒரு உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனம் அல்லது 32 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் விலக்களிக்கப்பட்ட ஒரு உருவகம் தவிர்ந்த ஆளெவரும், அதிகாரசபையின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, தனியாகவாயினுஞ்சரி அல்லது வேறு ஏதேனும் சொல்லுடன் இணைந்ததாகவாயினுஞ்சரி அவரது அல்லது அதன் பெயரின் அல்லது அவரது பெயரில் அவரது

அல்லது அதன் விவரணத்தின் பாகமொன்றாக, "நுண்நிதி" என்னும் சொல்லை அல்லது அதன் வழிவந்தவைகளுள் அல்லது அதன் எழுத்துப்பெயர்ப்புகள் அல்லது வேறு ஏதேனும் மொழியில் அதற்குச் சமமானவற்றுள் எதனையும் பயன்படுத்துதல் ஆகாது.

(3) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனமொன்று அதன்பெயரின் பாகமாக "நுண்நிதி" என்னும் சொல்லைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நியமிக்கப்பட்ட தேதியன்று அதன்பெயரின் பாகமாக "நுண்நிதி" என்னும் சொல்லைக் கொண்டிராத அத்தகைய ஏதேனும் நிறுவனம், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் "நுண்நிதி" என்னும் சொல்லை உள்ளடக்கும் வகையில் அதன் பெயரை மாற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தலும் வேண்டும்.

(4) இப்பிரிவில் உள்ள எதுவும் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாதல் ஆகாது —

(அ) உரிமமளிக்கப்பட்டவர்களின் அக்கறையைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட அவர்களின் ஏதேனும் கழகம்;

(ஆ) உரிமமளிக்கப்பட்டவர்களின் ஊழியர்களாகவுள்ள வேலையாட்களின் ஒரு கழகம் அல்லது இணைப் பாகவுள்ள (138 ஆம் அத்தியாயமான) தொழிற்சங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு தொழிற்சங்கம்; அத்துடன்

(இ) எந்த நிறுவனம் தொடர்பில் அத்தகைய பயன்பாடு சர்வதேச உடன்படிக்கைமூலம் சட்டத்தினால் தாபிக்கப் படுகின்றதோ அல்லது ஏற்றங்கீகரிக்கப்படுகின்றதோ அந்த நிறுவனம் ஒன்று.

ஊடக நிறுவனங்களின் கடப்பாடுகள்

72. (1) இருபதாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கமைய, அத்தகைய செயற்பாடு தொடர்பாக விளம்பரமொன்றை அல்லது ஏதேனும் தொழில் மேம்படுத்துகைசார் வெளியீட்டை

வெளியிடுவதற்கு முன்னர் எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டவராவென பணக்கடன் வழங்குவதற்கு முனைகின்ற அவரிடம் சரிபார்ப்பது ஏதேனும் ஊடக நிறுவனத்தின் கடமையாதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்படாத அல்லது இச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் விலக்களிக்கப்படாத ஆளொருவரினால் பணக்கடன் வழங்குதொழிலை அல்லது நுண்நிதித் தொழிலை முனைதல் பற்றிய விளம்பரங்களை வெளியிடுவதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு ஏதேனும் ஊடக நிறுவனத்தைத் தேவைப்படுத்தி அத்தகைய நிறுவனத்துக்கு அறிவித்தலொன்றை அனுப்பலாம்.

*கடன் தகவல் பணியகச் சட்டத்தின் நோக்கங்களுக்காக உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனங்கள் "கடன் நிறுவனங்களாக" கருதப்படுதல் வேண்டும்*

73\. 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டத்தின் நோக்கத்துக்காக –

(அ) உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனங்கள் "கடன் கொடுக்கும் நிறுவனங்களாக" கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) உரிமமளிக்கப்பட்ட பணக்கடன் வழங்குநர்கள் "கடன் வழங்கும் நிறுவனங்களாக" கருதப்படுதல் வேண்டும்.

*உரிமமொன்று வழங்கப்படுவதன் எண்பிப்பு*

74\. இச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை மற்றும் 32 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை மீறியதற்கான எவரேனும் ஆளின் குற்றவழக்கில், அத்தகைய ஆளுக்கு பணக்கடன் வழங்கு தொழில் அல்லது நுண்நிதித்தொழிலை கொண்டுநடாத்துவதற்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளது என எண்பிக்கும் பொறுப்பு அத்தகைய ஆளின் மீதாதல் வேண்டும்.

*சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் மூலப்பிரதிகளின் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்*

75\. ஆவணமொன்றின் உண்மையான பிரதியொன்றாக பணிப்பாளர் தலைமையதிபதியினால் சான்றுப்படுத்தப்பட்ட இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் பேணப்பட்ட அத்தகைய ஆவணத்தின் ஏதேனும் பிரதி, அத்தகைய ஆவணத்தின் மூலப்பிரதியின் சான்றாக ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

உரிமமளிக்கப் பட்டவர்கள் பணக்கடன் வழங்கும் கட்டளைச் சட்டத்தின்கீழ் விலக்களிக் கப்படுதல் வேண்டும்

76. (80 ஆம் அத்தியாயமான) பணக்கடன் வழங்கும் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவரேனும் உரிமமளிக்கப் பட்டவருக்கு ஏற்புடையனவாதலாகாது.

குற்றவியல் அல்லது குடியியல் வழக்கு நடவடிக்கை களில் எதிர்வாதம்

77. இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையின் உறுப்பினரொரு வரினால், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது எவரேனும் ஊழியரினால் அல்லது அதிகாரசபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் காரியத்துக்கான ஏதேனும் குற்றவியல் அல்லது குடியியல் வழக்கு நடவடிக்கையில், இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, கட்டளை அல்லது பணிப்பின்கீழ் அவரது கடப்பாடுகளை நிறைவேற்றும்போது அல்லது கருதப்பட்ட நிறைவேற்றுகை யின்போது அல்லது அந்நிறைவேற்றுகை தொடர்பாக அவர் உரிய விழிப்புக்கவனத்தையும் நியாயமான கவனிப்பையும் பிரயோகித்தார் எனவும் நல்லெண்ணத்துடன் செயலாற்றினார் எனவும் அவர் எண்பித்தால், அது எதிர்வாதமொன்றாதல் வேண்டும்.

உறப்பட்ட செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்

78. விடயத்துக்கேற்ப அதிகாரசபையின் உறுப்பினரொரு வரினால், அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி யினால் அல்லது எவரேனும் ஊழியரினால் அல்லது அதிகார சபையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால், விடயத்துக்கேற்ப இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பு, விதி, கட்டளை அல்லது தேவைப்பாட்டின்கீழ் அவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளுக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள்

அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

அதிகார சபையானது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தினுள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

79. அதிகாரசபையானது 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தினுள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சட்டத்தின் இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான தவறுகள் என்னும் தலைப்பின் கீழ் பாகம் III இன் அத்தியாயம் I இன் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அது தொடர்பாக ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடமையானதாக கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

அதிகார சபையின் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல் வேண்டும்.

80. அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும், அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியும் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் XIII

### நிலைபெயர்கால ஏற்பாடுகள்

பணக் கடன் வழங்கு தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆட்கள் இருபத்துநான்கு மாதங்களுக்கு தொழிலைத் தொடருதல் வேண்டும்

81. (1) இருபதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பணக்கடன் வழங்குதொழிலொன்றைக் கொண்டு நடாத்தும் எவரேனும் ஆள் -

(அ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து இருபத்திநான்கு மாத காலப்பகுதியொன்றிற்கு அத்தகைய தொழிலை தொடர்ந்து கொண்டுநடாத்துதல் வேண்டும்; அத்தடன்

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் கீழ் உரிமத்துக்கான விண்ணப்பங்களைக் கோரி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் அதிகாரசபை

யினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதிக்குப்பின்னர் உரிமமளிக்கப்பட்ட பணக்கடன் வழங்குநர் ஒருவராக அவரது தொழிலைத் தொடர்வதற்கு உரிமமொன்றுக்கு விண்ணப்பித்தலும் வேண்டும்;

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்ட தேதி இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஆறு மாதங்களை பிந்தியதாக விருத்தலாகாது.

நுண் நிதியளிப்புச் சட்டத்தை நீக்குதல்

82. (1) இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச்சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளதான அதன் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், அறிவித்தலும், கட்டளையும், விதியும், வழிகாட்டுநெறியும் அல்லது பணிப்பும், விதிக்கப்பட்ட தேவைப்பாடும் செய்யப்பட்ட தீர்மானமும் அல்லது கையளிப்பும் அத்தகைய ஒழுங்குவிதி, அறிவித்தல், கட்டளை, விதி, வழிகாட்டுநெறி, பணிப்பு, தேவைப்பாடு, தீர்மானம் அல்லது கையளிப்பு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாகவிராதிருக்கும் அளவுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விடயத்துக்கேற்ப வழங்கப்பட்ட, விதிக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஒரு ஒழுங்குவிதியாக அறிவித்தலாக, கட்டளையாக, விதியாக, வழிகாட்டுநெறியாக, பணிப்பாக, தேவைப்பாடாக, தீர்மானமாக அல்லது கையளிப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக, நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டவையும் அல்லது எடுக்கப் பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளதுமான எல்லாப் பரிசோதனைகளும் அல்லது மேற்பார்வைசார் வழிமுறைகளும் இச்சட்டத்தின்கீழ் விடயத்துக் கேற்ப நடாத்தப்பட்ட அல்லது நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கப் படும் பரிசோதனையாக அல்லது எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் மேற்பார்வைசார் வழிமுறைகளாக கருதப்படுதல் வேண்டும்.

83. (1) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று நுண்நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற –

நுண்நிதிய ளிப்புச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப் பட்ட நிறுவ னங்கள் இச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப் பட்டனவாக கருதப்படுதல் வேண்டும்

(அ) நீக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் நுண்நிதிக் கம்பெனி; அல்லது

(ஆ) நீக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும் இச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுடன் இணங்கியொழுகின்றதுமான ஏதேனும் அரசசார்பற்ற நுண்நிதி ஒழுங்கமைப்பு,

இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்படும் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) நீக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் அரச சார்பற்ற நுண்நிதி ஒழுங்கமைப்பு, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அதன் ஏலவேயுள்ள சட்ட வடிவத்தில் நுண்நிதித்தொழிலை தொடர்ந்து கொண்டுநடாத்துதல் வேண்டும் என்பதுடன் அக்காலப்பகுதியினுள் இச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற, நீக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் அரச சார்பற்ற நுண்நிதி ஒழுங்கமைப்பு, பதிவு இல்லாதாக்கப்பட்ட அரச சார்பற்ற நுண்நிதி ஒழுங்கமைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) நீக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டத்தின் நியதிகளின்படி தொடுக்கப்பட்டனவும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ளனவுமான எல்லா வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும் அல்லது கருமங்களும் இச்சட்டம் நடைமுறைக்கு

வரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் நீக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி சொல்லப்பட்ட நீதிமன்றத்தினால் கேட்கப்படுதலும் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

பொருள் கோடல்கள்

84. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப்படுத்தினாலொழிய –

"பராயமடையும் வயது" என்பது, (66 ஆம் அத்தியாயமான) பராயமடையும் வயதுக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆசிய அபிவிருத்தி வங்கி" என்பது, 1966 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்படிக்கை (ஏற்புறுதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கி எனப் பொருள்படும்;

"இணைக்கம்பெனி" என்பது, இணைக்கழகங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளிலான முதலீட்டின் மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் (இகநி) 28 இன் கீழ் அல்லது காலத்துக்குக்காலம் இலங்கையில் ஏற்புடையற்பாலதான வேறு ஏதேனும் ஒத்த கணக்கீட்டு நியமத்தின்கீழ் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"கணக்காய்வாளர்" என்பது –

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவுள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர்கள் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத் தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றித ழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக்கணக்காளர்கள் குழுமம்

ஒன்று, எனப் பொருள்படும்;

"கடன் பெறுநர்" என்பது, எந்த ஆளுக்கு உரிமமளிக்கப் பட்டவரொருவரினால் பணம் கடனாக வழங்கப்படு கின்றதோ அந்த ஆள் ஒருவர் எனப் பொருள்படும்;

"மத்திய வங்கி" என்பது, 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படும்;

"நெருங்கிய உறவினர்கள்" என்பது, வாழ்க்கைத்துணை, வீட்டில் வாழும் துணை, பிள்ளைகள், பெற்றோர்கள் மற்றும் இரத்த உறவு மூலமான அல்லது மகவேற்பு மூலமான உடன்பிறப்புகள் எனப் பொருள்படும்;

"இணையுறு வைப்புக்கள்" என்பது, கடன்பெறுநர் ஒருவருக்கு வழங்கப்பட்ட கடன்கொடுக்கும் வசதி யொன்றுக்கு எதிராக அத்தகைய கடன்பெறுநரிடமிருந்து இணையுறுவொன்றாக பெறப்பட்ட சேமிப்பு வைப்பு ஒன்று எனப் பொருள்படும்;

"இலங்கை கடன் தகவல் பணியகம்" என்பது, 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கடன் தகவல் பணியகம் எனப் பொருள்படும்;

"வைப்பு" என்பது, காலத்துக்குக் காலம் திருத்தப்படக் கூடியவாறான 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின்கீழ் அதற்குக் குறித்தளிக்கப் பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"நிதிசார் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை" என்பது, இலங்கையின் நிதிசார் முறைமையின் குறிப்பிட்ட துறையொன்றை ஒழுங்குபடுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு எனப் பொருள்படும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கி, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு என்பவற்றையும் உள்ளடக்கும்;

"கொளிக் கம்பெனி" என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி" என்பது, 1944 ஆம் ஆண்டு யூலை மாதம் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் நியூ ஹாம்ப்ஷயரில் உள்ள பிரெட்டன் வூட்ஸில் நடாத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் பண மற்றும் நிதிசார் மாநாட்டில் வரையப் பட்ட ஒப்பந்தங்களைப் பின்பற்றித் தாபிக்கப்பட்ட மீள் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி எனப் பொருள்படும்;

"சர்வதேச அபிவிருத்திக் கழகம்" என்பது, 1961 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சர்வதேச அபிவிருத்திக் கழக உடன்படிக்கைச் சட்டத்தின் அட்டவணையின்கீழ் தாபிக்கப்பட்ட சர்வதேச அபிவிருத்திக் கழகம் எனப் பொருள்படும்;

"சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபன உடன்படிக்கைச் சட்டத்தின் அட்டவணையின் கீழ் தாபிக்கப்பட்ட சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் எனப் பொருள்படும்;

"முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் ஒருவர்" என்பது, எவரேனும் பணிப்பாளர் ஒருவர் உட்பட, நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ

எவரேனும் உரிமமளிக்கப்பட்டவரின் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கும், பணிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரமும் பொறுப்புடைமையும் கொண்ட ஆளொருவர் எனப் பொருள்படும்;

"சந்தை நடத்தை" என்பது, விற்பனைகள், ஊக்குவிப்புகள், விநியோகங்கள், நிருவாகம் மற்றும் ஒத்த வகையினவான தொழிற்செயற்பாடுகளினூடாக தமது தொழிலை நிறைவேற்றுவதற்கு சந்தையொன்றின் பங்குபற்றுநர்களின் நடத்தை அல்லது ஒழுகலாறு எனப் பொருள்படும்;

"நுண் நிதித் தொழில்" என்பது, பிணைப்பொறுப்பொன்றுடன் அல்லது பிணைப்பொறுப்பொன்றின்றி வட்டிக்கு அல்லது கடன் வழங்குநருக்கும் கடன்பெறுநருக்கும் இடையில் பகிரப்படுகின்ற கடன் வழங்குதலின் வரும்படியிலிருந்து எழுகின்ற இலாபம் அல்லது நட்டத்தின் பிரதிபயனாக பணக்கடன் வழங்கும் மற்றும் கடன் வழங்குநரினதும் கடன் பெறுநரினதும் நிலைபெறுதகுதன்மையை பேணுகின்ற அதே வேளையில், சமூக வலுவூட்டல் என்ற பிரதான குறிக்கோளுடன் பிரதானமாக குறைந்த வருமானம் பெறும் ஆட்களுக்கும் நுண்தொழில் முயற்சிகளுக்கும் இச்சட்டத்தின் அட்டவணைக்கு இசைந்தொழுக வேறு நிதிசார் சேவைகளை வழங்கும் தொழில் எனப் பொருள்படும்;

"நுண்நிதி நிறுவனம்" என்பது, நுண்நிதித் தொழிலை கொண்டு நடாத்துவதற்கு இச்சட்டத்தின் பாகம் V இன் கீழ் அதிகாரசபையினால் உரிமமளிக்கப்பட்ட ஒரு நிறுவனம் எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் எந்த அமைச்சருக்கு இலங்கை நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்;

"அரச சார்பற்ற நுண்நிதி ஒழுங்கமைப்பு" என்பது, நீக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண்நிதியளிப்புச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வலிந்துதவு சமூக சேவை ஒழுங் கமைப்புக்கள் பதிவாளரினால் பதிவுச் சான்றித ழொன்று வழங்கப்பட்ட ஒரு அரசசார்பற்ற நிறுவனம் அல்லது இச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்கப்பட்ட ஒரு அரசசார்பற்ற ஒழுங்கமைப்பு எனப் பொருள்படும்;

"பணக்கடன் வழங்குநர்" என்பது, எவரேனும் ஆள் வேறேதேனும் தொழிலொன்றைக் கொண்டு நடாத்துபவராகவிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி பணக்கடன் வழங்கு தொழிலொன்றைக்கொண்டு நடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்துபவராக எவ்வகையிலும் தன்னை விளம்பரப்படுத்துகின்ற அல்லது அறிவிக்கின்ற அல்லது தன்னை காட்டி நிற்கின்ற அவ்வாள் எனப் பொருள்படும்;

"பணக்கடன் வழங்கும் உடன்படிக்கை" என்பது, உரிமமளிக்கப்பட்டவரொருவரினால் கடன்பெறுநர் ஒருவருக்கு கடனாக வழங்கப்பட்ட பணத்தொகைக்கு ஏற்புடையற்பாலனவான நியதிநிபந்தனைகளை வரைவிலக்கணம் கூறுகின்ற அத்தகைய உரிமமளிக்கப் பட்டவருக்கும் அத்தகைய கடன்பெறுநருக்கும் இடையிலான எழுத்திலான ஒரு உடன்பாடு எனப் பொருள்படும் என்பதுடன் அதற்கென ஏதேனும் திருத்தம், சேர்க்கை அல்லது குறைநிரப்புகையையும் உள்ளடக்கும்;

"பணக் கடன் வழங்கு தொழில்" என்பது, பணக்கடன் வழங்குநர் ஒருவர் ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்துபவராகவிருப்பினுஞ்சரி அல்லது அல்லவா யினுஞ்சரி அத்தகைய பணக்கடன் வழங்குநரால் கடன்பெறுநர் ஒருவருக்கு பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி வட்டிக்கு பணக்கடன் வழங்குதல் எனப்பொருள்படும் என்பதுடன் பணக்கடன் வழங்குநர் ஒருவருக்கும் கடன்பெறுநர் ஒருவருக்குமிடையில் பகிரப்படும் கடன்வழங்குவதன்

வரும்படிகளிலிருந்து எழுகின்ற இலாபம் அல்லது நட்டத்தின் பிரதிபயனாக பணத்தொகையொன்றை கடனாக வழங்குதலையும் உள்ளடக்குதல் வேண்டும்;

"பதவி தாங்குநர்" என்பது, சங்கமொன்றில் தலைவர், துணைத்தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் அல்லது ஒத்த பதவியொன்றை அல்லது உத்தியோகத்தை வகிக்கின்ற வேறு எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

"வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் பதிவாளர்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் பதிவாளர் எனப் பொருள்படும்;

"தொடர்புபட்ட கம்பெனி" என்பது, கம்பெனியொன்று பின்வருமாறு இருப்பின் வேறொரு கம்பெனியுடன் தொடர்புபட்ட கம்பெனியொன்று எனப் பொருள்படும்-

(i) அக்கம்பெனி மற்றைய கம்பெனியின் துணை அல்லது கொளிக் கம்பெனியாகவிருப்பின்;

(ii) அக்கம்பெனியின் கொளிக்கம்பெனி மற்றைய கம்பெனியின் கொளிக் கம்பெனியொன்றாகவிருப்பின்; அல்லது

(iii) அக்கம்பெனி, மற்றைய கம்பெனியுடன் தொடர்புபட்டதாகவுள்ள கம்பெனியொன்றுடன் தொடர்புபட்டதாகவிருப்பின்;

"இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்பது, 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு எனப் பொருள்படும்;

"குறிப்பிடத்தக்க முகாமைத்துவ அக்கறை" என்பது, பின்வரும் முறைகளில் பணிப்பாளர் ஒருவரினாலான அல்லது ஒரு சிரேட்ட அல்லது நிறைவேற்று முகாமைத்துவ உறுப்பினர் ஒருவரினாலான பங்கு வைத்திருக்கையைப் பொருட்படுத்தாமல் நுண்நிதி நிறுவனமொன்றின் கட்டுப்பாடு மற்றும் முகாமைத் துவத்தின் மீதான கட்டுப்பாட்டுத் தத்துவம் எனப் பொருள்படும் -

(அ) நேரடியாக;

(ஆ) பொதுவான ஏற்றுக்கொள்கைமூலம்; அல்லது

(இ) பின்வருபவர்களுள் ஒருவரினூடாக அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களினூடாக –

(i) வாழ்க்கைத்துணை;

(ii) பிள்ளை அல்லது பிள்ளையொன்றின் வாழ்க்கைத்துணை;

(iii) பேரப்பிள்ளை அல்லது பேரப்பிள்ளை யொன்றின் வாழ்க்கைத் துணை;

(iv) எவரேனும் பெற்றோர்; அல்லது

(v) சகோதரன் அல்லது சகோதரி மற்றும் அவர்களின் வாழ்க்கைத் துணைகள்;

"சங்கம்" என்பது, (123 ஆம் அத்தியாயமான) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு சங்கம் அல்லது பாராளுமன்ற சட்டமொன்றின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு சங்கம் எனப் பொருள்படும்;

"குறித்துரைக்கப்பட்டவை" என்பது, அதற்கென ஆக்கப்பட்ட விதிகளினால் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்டவை எனப் பொருள்படும்;

"துணைநிலைக் கம்பெனி" என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் அப்பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"கணிசமானளவிலான நிதிசார் அக்கறை" என்பது-

(அ) ஒரு கம்பெனி தொடர்பாக, அதன் செலுத்தப்பட்ட பெறுமதியானது கம்பெனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தின் பத்து சதவீதத்தை விஞ்சுகின்றதாகவுள்ள, தனித்தனியாகவோ அல்லது ஒன்றாகச் சேர்த்தோ, அதன் பங்குகளில் இன்னொரு கம்பெனியினால் அல்லது ஒரு தனியாளினால் அல்லது அவரது நெருங்கிய உறவினர்களினால் நன்மைபயக்கும் அக்கறையொன்று வைத்திருக்கப்படுகின்றமை அல்லது அத்தகைய கம்பெனி சார்பில் தனியாளொருவரினால் அல்லது அவரது நெருங்கிய உறவினர்களினால் அல்லது இன்னொரு கம்பெனியினால் கொடுக்கப்பட்டதும், செலுத்தப்பட்ட மூலதனத்தின் பத்து சதவீதத்துக்குக் குறையாததுமான பணத்தொகையொன்றுக்கான ஓர் உத்தரவாதம் அல்லது நட்டோத்தரவாதம் உள்ளமை என்று பொருளாகும்; அல்லது

(ஆ) ஒரு பங்காண்மை தொடர்பாக, பங்காண்மையின் எல்லாப் பங்காளர்களினாலும் ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட மொத்த மூலதனத்தின் பத்து சதவீதத்துக்கு அதிகமானதைக் குறிக்கின்றதாகவுள்ள, தனித்தனியாகவோ அல்லது ஒன்றாகச் சேர்த்தோ தனியாளொருவரினால் அல்லது அவரது நெருங்கிய உறவினர்களினால் அதன்கண் வைத்திருக்கப்பட்ட நன்மைபயக்கும் அக்கறை அல்லது அத்தகைய பங்காண்மையின் சார்பில் தனியாளொருவரினால் அல்லது அத்தனியாளின் வாழ்க்கைத்துணையினால், பெற்றோரினால் அல்லது பிள்ளையினால் கொடுக்கப்பட்டதும், அம்மூலதனத்தின் பத்துசதவீதத்துக்குக் குறையாததுமான பணத்தொகையொன்றுக்கான ஓர் உத்தரவாதம் அல்லது நட்டோத்தரவாதம் உள்ளமை என்று பொருளாகும்;

85. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

[பிரிவு 32]

**அட்டவணை**

உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனமொன்று பின்வரும் தொழிற் செயற்பாடுகளில் ஈடுபடலாம்:-

(அ) வீடமைப்பு உட்பட, எல்லா வகையினவையுமான பொருளாதாரச் செயற்பாடுகளுக்காகச் சபை விதிக்கக் கூடிய அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைவாக, காசாக அல்லது பொருளாக இணையுறு பிணைப் பொறுப்புடனோ அல்லது அதுவின்றியோ, நிதிசார் வசதியை வழங்குதல்;

(ஆ) கடன்பெறுநர்களுக்கு வரையறுக்கப்பட்ட சேமிப்பு வசதிகளை வழங்குவதில், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்துவதனை எவ்வாறாயினும் தவிர்த்து, அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட விதிகளில் தரப்பட்டுள்ள மட்டுப்பாடுகளுக்கமைய, சேமிப்புக் கணக்குகளை திறத்தல், பேணுதல் மற்றும் முகாமை செய்தல்;

(இ) அதனால் வழங்கப்பட்ட கடன்களுக்கும் முற்பணங் களுக்கும் பிணைப்பொறுப்பளிக்கும் நோக்கத்துக்காக அதற்கான ஏதேனும் வகையினதான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் அடகு வைப்புக்கள், ஈடுகள், அடமானங்கள் அல்லது சாட்டுதல்கள் என்பவற்றை ஏற்றுக்கொள்ளுதல்;

(ஈ) கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உள்ளீடுகள், கால்நடைகள், எந்திரத்தொகுதி மற்றும் கைத்தொழில் மூலப்பொருட்கள் என்பவற்றை வாங்குவதற்கும், விற்பனை செய்வதற்கும், வழங்குவதற்கும் கடன் வழங்குதல் மற்றும் அத்தகைய கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உள்ளீடுகள், கால்நடைகள், இயந்திரத் தொகுதி மற்றும் கைத்தொழில் மூலப்பொருட்கள் என்பவற்றை விற்பனை செய்வதற்காக ஏதேனும் ஒழுங் கமைப்புக்கான முகவரொருவராகச் செயலாற்றுதல்;

(உ) அதன் பணங்களை மதிநுட்பமான முறையில் முதலீடு செய்தல்;

(ஊ) களஞ்சியப்படுத்துகை மற்றும் பாதுகாப்பான கட்டுக்காப்பு வசதிகளை வழங்குதல்;

(எ) சிறிய தொழில்கள், சுயதொழில் கருத்திட்டங்கள் மற்றும் குடிசைக் கைத்தொழில்கள் என்பவற்றிலான முதலீடுகள் தொடர்பாக அதன் வாடிக்கையாளர்களுக்கு உயர்தொழில்சார் மதியுரை வழங்குதல்;

(ஏ) நுண்நிதி தொடர்பான பல்வேறு இடர்களுக்கெதிராகக் காப்பதற்கு வாடிக்கையாளர்களுக்குச் சேவைகளும் வசதிகளும் வழங்குதல்;

(ஐ) வாடிக்கையாளர்களுக்கு முகாமைசார், சந்தைப்படுத்தல், தொழில்நுட்ப மற்றும் நிருவாக மதியுரை அளித்தல் அத்துடன் அத்தகைய துறைகளில் சேவைகளைப் பெறுவதில் அவர்களுக்கு உதவுதல்;

(ஒ) வாடிக்கையாளர்களுக்குத் தொழில்நுட்ப உதவியையும் பயிற்சியையும் வழங்குதல்;

(ஓ) இயைபான அதிகாரசபையிடமிருந்து அவசியமான உரிமத்தை அல்லது அங்கீகாரத்தைப் பெற்ற பின்னரும் அத்தகைய அதிகாரசபையின் அத்தகைய விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாகவும், நிதிக் குத்தகைத் தொழிலையும், அடகுத் தரகுத் தொழிலையும் மற்றும் காப்புறுதித் தொழிலையும் நடாத்துதல்;

(ஔ) 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டத்தின் கீழும் அதிகாரசபையினால் விதிக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனையின் மீதும் வாடகைக் கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுதல்;

(க) அதிகாரசபை, உரிமமளிக்கப்பட்ட நுண்நிதி நிறுவனங்கள் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கக்கூடிய வேறு ஏதேனும் தொழிற் செயற்பாடு.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.